# சைவநீதி

வெகுதானிய மார்கழி

சைவ வளர்ச்சி கருதிய செய்தி தரும்
மாத இதழ்



கொழும்பு கொட்டாஞ்சேனை, அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்

## விநாயகர் ஷஷ்டிச் சிறப்பிதழ் 1998.12.24

உ

சிவமயம்

# மணிவாசகர் உடனாம்
# சிவகாம சுந்தரி சமேத நடராஜர்



செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
"பூவெனப் படுவது பொறிவாழ் பூவே."

துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள்

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவநீதி

மலர் 2 வெகுதானிய மார்கழி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாதஇதழ் இதழ் 9

கௌரவ ஆசிரியர்
சைவப்புலவர்மணி
வித்துவான்
திரு. வ. செல்லையா

நிர்வாக ஆசிரியர்
திரு.செ. நவநீதகுமார்
42. ஜானகி லேன்,
கொழும்பு 04.

பதிப்பாசிரியர்
திரு. மு. கௌரிராஜா.

## தோன்றாத் துணை

மனித வாழ்வில் துணை அவசியமானதொன்று. குழந்தைக்குத் தாய் துணை. கணவன் மனைவி ஒருவருக்கு ஒருவர் துணை. பெற்றோர்க்குப் பிள்ளைகள் துணை. வாழ்விலே பலர் மாறி மாறித் துணையாக இருக்கின்றார்கள். இப்படி நிலைமாறும் துணையை விட நிலையான துணை உண்டா? ஆம் உண்டு. அந்தச் சிறந்த உயர்ந்த, பெருந்துணை தான் இறைவன்.

"திக்கற்றவற்குத் தெய்வம் துணை" என்பது முது மொழி. ஆதரவு அற்றவர்கட்கு இறைவன் வேண்டிய வடிவிலே தோன்றித் துணை புரிவான். பிட்டினை விற்றுண் போற்கும் பேரிடும்பை உளதாமோ? எனக் கலங்கிய வந்தியம்மையாரிடம் கூலியாளாக வந்தும், மதுரையின் கண் மாமனாகி வந்து வழக்குரைத்தும், பசியால் வருந்திய பன்றிக் குட்டிகளுக்குப் பன்றியாய் வந்து பால் கொடுத்தும் சகல உயிர்களுக்கும் துணை நிற்பவன் இறைவன்.

அவன் தோன்றியும் (வெளிப்பட்டும்) தோன்றாது நின்றும் அருள் புரிவான். அப்பரடிகளுக்கு வஞ்சனை அமணர் தந்த நஞ்சை அமுதாக்கு வித்தவன் இறைவன். கல்லோடு கட்டிக் கடலில் இட்ட போது இறைவன் அருளாற் கல் தெப்பமாக மிதந்தது. அங்கே இறைவன் தோன்றாத் துணையாகி நின்று அருள் செய்தான். நாமும் ஐந்தெழுத்தோதி அன்போடு இறைவனை மன, மொழி, மெய்களால் வழிபட்டாற் றோன்றாத்துணை எமக்கும் துணையாக விருக்கும்.

*ஈன்றாளு மாயெனக் கெந்தையுமா யுடன் தோன்றினராய்*
*மூன்றா வுலகம் படைத்துங்கந் தான் மனத் துள்ளிருக்க*
*ஏன்றான் இமயவற் கன்பன்திருப் பாதிரிப்புலியூர்*
*தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்னடியேங்களுக்கே*

# சைவ நீதி

## பொருளடக்கம் :

1. தோன்றாத் துணை - ஆசிரியர் 1

2. பொருளடக்கம். - 2

3. அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய அமைவு
- பண்டிதர் சி. அப்புத்துரை 3

4. அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் ஆலயமாகிய கதை
- சிவஸ்ரீ நடராஜ சோமஸ்கந்தக் குருக்கள் 5

5. ஓரேர் உழவு
- பண்டிதர் ச. சுப்பிரமணியம் 8

6. தொன்மை வாய்ந்த ஸ்ரீ வரதராஜ விநாயகர் பெருமான் ஆலய வரலாறு
- எச். எச். விக்கிரமசிங்க 12

7. நினைக்க நினைக்க நெஞ்சம் உருகுதே
- முருகவே . பரமநாதன் 13

8. அறநெறிக் கல்வி வளர்ச்சி
- ம. நடராஜா 16

9. மானக்கஞ்சாற நாயனார்
- சிவ சண்முகவடிவேல் 18

10. திருச்சாழல்
- பண்டிதர் சி. அப்புத்துரை 20

11. அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் திருவூஞ்சல் 23

12. அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய நடராஜ திருவூஞ்சல் 26

13. அருள்மிகு வரதராஜ விநாயகர் இரட்டை மணிமாலை
- பண்டிதர் சி. அப்புத்துரை 29

சைவநீதி இதழில் வரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்
– இதழ் நிர்வாகிகள்.

கொழும்பு கொட்டாஞ்சேனை

# அருள்மிகு ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலய அமைவு

- பண்டிதர் சி. அப்புத்துரை -

கொட்டாஞ்சேனைப் பஸ்தரிப்பு நிலையச் சந்தியிலிருந்து, வடக்கு நோக்கிச் செல்லும் கொட்டக்கேன வீதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கும் வடக்கே, கிழக்கு நோக்கிப் பிரிந்து செல்லும் வாசல வீதிச் சந்திக்கும் வடக்கே, கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையம் நோக்கிச் செல்லும் வழியில், சந்தியிலிருந்து சுமார் ஐம்பது மீற்றர் தொலைவில் வீதியின் மேற்குப் புறமாகக் கிழக்கு நோக்கிய ஆலயத்தி லிருந்து அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் அருளாட்சி புரிகின்றார்.

ஆலயத்தின் முன்னே அழகியதொரு 42 அடி உயரமான கோபுரம் உண்டு. கோபுர வாயிலின் வடக்கில் ஆலயச் சுவருடன் சேர்ந்தாற் போல், ஆலயத்துட் செல்லுமுன் கைகால் முதலியவற்றைத் தூய்மை செய்வதற்குரிய புனிதநீர்த் தொட்டியொன்றுண்டு. தெற்கில் தேங்காய் உடைப்பதற்குரிய தொட்டி போன்றதொரு அமைப்பு உண்டு. இந்த அமைப்புப்பணி இந்த ஆண்டில் (1998) நடைபெற்றது.

ஆலயத்தினுள்ளே கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம் என்னும் இரு அமைப்புக்களுடன் முன்னே பெரியதொரு மண்டபம் உண்டு. அந்த மண்டபத்தின் அர்த்த மண்டபத்துடன் ஒட்டிய சிறு பகுதி மற்றோர் மண்டபம் போன்று, "எவர்சில்வர்" அங்கி கொண்ட தண்டுகளாற் பிரிக்கப்பட்டுள்ளது. அங்கேதான் பலிபீடம் மூஷிகம் அமைதி கண்டுள்ளன. அர்த்த மண்டபத்தினுள் நுழையும் வாயிலின் தென்புறம் சதாசிவ மூர்த்தமாய சிவலிங்கமும், வடக்கில் அம்பாளும் சின்னஞ்சிறிய சந்நிதிகளிலிருந்து அருள் புரிகின்றனர். உள்ளே மூலஸ்தானத்தில் வரதராஜ விநாயகர் அருட் கடாட்சம் பெருகுகின்றது.

முன்னுள்ள பெரிய மண்டபந்தின் தென்கிழக்கில் சிறியதோர் அலுவலகம் உண்டு. தென்புறமுள்ள சுவர் நிறைவாக ஔவையார் ஆக்கமாகிய விநாயகர் அகவல் அழகிய எழுத்திற் காணப்படுகின்றது. அதன் அமைப்பு, அவசரமாக வலம்வந்து வழிபட்டுச் செல்ல வேண்டுமென்ற எண்ணத்துடன் வலம் வருபவர்களைக் கூட ஈர்த்துச் சில நிமிடங்களையாவது தரித்துப் பார்க்கச் செய்கின்றது. தென்மேற்கில், மேற்கு வீதியோரமாக, அஸ்திர தேவர் வலமாகவும் நாகதம்பிரான் இடமாகவும் உடனாகிய பாலவிநாயகரைக் கிழக்கு நோக்கிய சிறிய சந்தியிலே தரிசிக்க முடிகின்றது. அடுத்து மனோன்மணி அம்பாள் அருகே வேல் அருளாட்சிக் குள்ளாகின்றோம். தொடர்ந்து பழனி ஆண்டவர் அருள் பாலிக்கின்றார். வடமேற்கில் வள்ளி தேவயானை உடனாகிய முருகனைத் தரிசித்துப் பேரமைதி யடைகின்றோம். வடகிழக்கிற் சிறிது மேற்காக வசந்த மண்டபம்



விநாயகர் வெள்ளி அங்கியுடன்

அமைந்துள்ளது. அங்கே பஞ்சமுக விநாயகரின் அருளாட்சி கிடைக்கின்றது. அவர் முன்னே நர்த்தன விநாயகரைத் தரிசிக்க முடியும். பஞ்சமுக விநாயகரின் வலப்புறம் மற்றோர் எழுந்தருளி விநாயகரையும், இடதுபுறம் நடேசரையும் அவர் பக்கலிற் சிவகாமி அம்பாளையும் முன்னே சீர்திருத் தேவாரமும் திருவாசகமும் காண வைத்து, உய்வைத் தரச் செய்த நால்வரைக் கண்டு தொழ முடியும்.

வடகிழக்கில் நான்கு படிகள் தாண்டிக் கிழக்கு நோக்கி மேலே சென்று, வடக்கே திரும்பிப் பார்த்தாற் பெரிய தோரரசு அரசோச்சுவதைப் பார்க்கலாம். இந்த அரசமரம் வரலாற்றுப் பெருமையை உடையது. அதாவது வழிபாட்டு ஆரம்பந் தொடக்கமாக நின்று கொண்டிருப்பது. இந்த மரத்தின் வடக்குப்புறமாக ஒரு கருங்கல் விநாயகரை வைத்து வழிபாடாற்றியுள்ளனர். ஒரு கருங்கல் நாகதம்பிரானும் இருந்திருக்கின்றார். இவர்களுக்குத் தீபம் ஏற்றக், கருங்கல்லிற் செதுக்கப்பட்ட ஒரு அமைப்பும் இருந்தது. அந்த விநாயகனையும், நாக தம்பிரானையும், கருங்கல் தீப அமைப்பையும் படியில் ஏறி வடக்கே திரும்பியதும் பார்க்கின்றோம். அந்த அரச மரத்தை வலம் வரும் போது வடக்கில் வலப்புறம் நாக தம்பிரானையும் வடகிழக்கில் இடதுபுறம் அஞ்சனப் புகையென ஆலமாமெனச் செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக் கஞ்சுகக் கடவுளைச் சிறியதோர் சந்நிதியிற் கண்டு வணங்கலாம். அப்பால் கிழக்குப் புறத்திற் கிழக்கு நோக்கியிருந்து அருளும் விநாயகனைப் பணிந்து வழிபாட்டினை நிறைவாக்கலாம்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •


கொழும்பு கொட்டாஞ்சேனை

*அருள்மிகு ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலயம்*

நிர்வாகம் வெளியிட்ட நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 2. | சக்தி வழிபாடு | – | முதற்பதிப்பு 1993. இரண்டாம் பதிப்பு 1997<br>தொகுப்பு: தெ. ஈஸ்வரன் B.Com. |
| 1. | பிள்ளையார் வழிபாடு | – | முதற்பதிப்பு 1992. இரண்டாம் பதிப்பு 1993<br>தயாரிப்பு : தெ. ஈஸ்வரன் B.Com |
| 3. | சைவ வினா விடை | – | முதலாம் புத்தகம். இவ்வாலய முதற் பதிப்பு 1994. |
| 4. | திருமுறைப் பண்ணிசை | – | முதற் பதிப்பு 1995<br>தொகுப்பு : தெ. ஈஸ்வரன் B.Com |
| 5. | சிவவழிபாடு | – | முதற் பதிப்பு 1995<br>மதுரை கி. பழனியப்பனார். |
| 6. | திருக்குறள் | – | 1995. 01. 19 ஐங்கரன் மண்டபத்திறப்பு விழா நினைவு வெளியீடு. |

அருள்மிகு வரதராஜ விநாயகர் பேரிலெழுந்த நூல்

*அருள்மிகு வரதராஜ விநாயகர் இரட்டை மணிமாலை 1998.*

– பண்டிதர் சி. அப்புத்துரை –

கொழும்பு கொட்டாஞ்சேனை

# அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் ஆலயமாகிய கதை

- சிவஸ்ரீ நடராஜா சோமாஸ்கந்தக் குருக்கள் -

கொட்டாஞ்சேனை வீதியிலிருந்து வாசல வீதி பிரிந்து செல்லும் சந்திக்கு வடக்கில், சுமார் ஐம்பது மீற்றர் தொலைவில், வீதியின் மேற்கில் குளிர்நிழலைத் தந்து நிற்கும் பென்னம் பெரிய அரச மரத்துடனுள்ளதுதான் கொட்டாஞ்சேனை அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயமாகும்.

இந்த ஆலயத்தின் தோற்ற காலத்தையோ, பரிபாலனம் பற்றிய நிறைவான செய்திகளையோ இன்று பெறக்கூடிய வாய்ப்புக்கள் பெரியளவிற்கு இல்லையென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், எதிர் காலத்தில், ஆய்வுக் கட்டுரைகளைத் தயாரித்துச் சமர்ப்பிக்கவுள்ள பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைசார் மாணவர்களுக்குப் பயன்படக் கூடிய தரவுகளை மட்டும் இங்கு தந்துள்ளோம்.

ஆதியில் இங்குள்ள அரசமரத்தடியில் வழிபாடு நடந்திருக்கின்றதென்று தெரிகின்றது. அந்த வழிபாட்டுத் தொடர்பில், கருங்கல்லிற் செதுக்கப்பட்டதொரு விநாயகரும் வழிபாட்டிற்குரியவராகி இருந்திருக்கின்றார். விநாயகருடன் (கருங்கல்) நாகதம்பிரானும் இருந்திருக்கின்றார். அத்துடன் எண்ணெய் விட்டுத் திரிபோட்டுத் தீப மேற்றக் கூடியதொரு கருங்கல் விளக்கமைப்பும் இருந்திருக்கிறது. அந்தக் கருங்கற் சுடர்தாங்கியில் 1890 என்னும் எண்ணும் ணன் என்னும் எழுத்துக்களும் ஒரு பக்கமாகக் காணப்படுகின்றன. சீமேந்து போட்டுக் கட்டப்பட்டுள்ளமையால் மறுபுறம் என்ன எழுத்துக்கள் உள்ளனவென்று கண்டு கொள்ள முடியவில்லை. அந்தச் சுடர்தாங்கியிலே "கஅஎசூ" என்னும் தமிழ் எண் குறியீடு உண்டு என்றும் அது 1876 ஆம் ஆண்டைக் குறிப்பது என்றும் ஒரு கருத்துக் கிடைத்ததும் உண்டு. இந்தச் சிறிய பழமை வாய்ந்த பிள்ளையாருடன், 1890 என்றோ 1876 என்றோ ஆண்டினை சொல்லிக் கொண்டிருக்கும் அந்தச் தீப அமைப்பு இருந்த காரணத்தால், இந்த இடத்தில் விநாயகர் வழிபாடு 1890க்கு முன்பிருந்தே இருந்திருக்கிறதென்று துணிய முடிகின்றது. இக்கருத்தை உறுதி செய்யக்கூடிய தக்க சான்றாக அந்தத் தீப அமைப்பு இன்றும் இருந்து கொண்டிருக்கிறது.

அரச மரத்தடித் தெய்வீகத்தை வழிபடும் நோக்கில் இன்றுள்ள படிகளில் ஏறி மரத்தை நோக்கித் திரும்பியதும், அடியார்கள் தத்தம் சொந்தக் கரங்களினால் நீர் பெய்து அபிஷேகம் செய்யும் – நீரில் ஒரு பகுதி மறைந்த நிலையிலிருக்கும் – (கருங்கல்) விநாயகரே அந்தக்கால வழிபாட்டிற்குரியவராயிருந்த வரதராஜ விநாயகராவர். அவர் பக்கலில் அன்றிருந்த நாகதம்பிரானையும் பார்க்க முடிகின்றது. பிள்ளையாரின் பின்னே இருப்பதுதான் காலம் பற்றியதொரு தகவலைத் தந்து கொண்டிருக்கும் கருங்கற்றகழியாகும். இவை இந்த ஆலயத்தின் பழம் பெரும் நிதியங்கள் என்பதை எம் மனதிற் பதித்துக் கொள்ள வேண்டும்.

இந்த ஆலயம் எல்லாள மன்னன் காலத்திற்கு முந்தியதென்றும், போர்த்துக்கீசர் காலத்தில் அவர்களது இராணுவ வீரர்கள் இந்த ஆலயத்தைப் பதுங்கிச் சரணடைந்திருக்கும் இடமாகப் பயன்படுத்தினார்களென்றும், ஒல்லாந்தர்

ஆட்சிக்காலத்தில் தங்களுக்குத் தேவையானவற்றைச் சுருட்டிக் கொண்டு ஆலயத்தை அழித்து விட்டார்கள் என்றும் கருத்துக்கள் உண்டு. இவையெல்லாம் ஆய்விற்குரியவை.

ஒரு காலத்தில் அரச மரத்தின் வடக்கில் மரத்தடியில் நடைபெற்ற வழிபாடு, மற்றொரு காலப்பகுதியில் அரச மரத்தின் தென்மேற்கில் மரத்திற்கு அண்மையாக நடை பெற்றிருக்கிறது. நாகதம்பிரானும் உடனாகி இருந்திருக்கிறார். இந்த வகை மாற்றம் நிகழ்ந்த காலம் எது என்பதுந் தெரியவில்லை.

முதலாவது உலக மகாயுத்தம் ஆரம்பமாகவிருந்த வேளையில், கொட்டாஞ்சேனை ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயச் சிவாசாரியார்களது இன்றைய வதிவிடமாயமைந்துள்ள, அன்றைய அரசடி இடுகாட்டுப் பகுதியில் 1913 இல் ஓர் இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலமாகிய அந்த நேரத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருந்த பல நாடுகளைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் குறிப்பிட்ட அந்த முகாமில் இருந்திருக்கிறார்கள். வட இந்தியாவைச் சேர்ந்த சண்முகர்ஜீபட்டேல் என்பவர் அந்த முகாமின் தலைமையை ஏற்றுப் பணி புரிந்து கொண்டிருந்தார். அவர் விநாயகர் வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடுடையவர். அதனால் அரச மரத்தடியை இடமாகக் கொண்டிருந்த வரதராஜ விநாயகரைத் தரிசித்து வழிபடும் முறைமை அவருடையதாயிற்று. இவ்வண்ணந் தொடர்ந்து நடந்து வந்த முறைமையால் விநாயக வழிபாட்டிடத்திற்கு அருகாமையில் இருந்த வில்லவராஜா என்பவருடன் அவர் தொடர்பு நெருக்கமாகியது. அத்தொடர்பினால் சண்முகர் ஜீபட்டேல் வில்வராஜாவின் மகளைத் திருமணஞ் செய்து கொண்டார். இந்தத் திருமணத் தொடர்பு, சண்முகர்ஜீபட்டேலுக்கு, விநாயகருடனான தொடர்பை மேலும் வலுவடையச் செய்தது. அரச மரத்தின் தென்மேற்கில் பிள்ளையாருக்கென ஒரு ஆலயம் உருவாகியது. சுவர்களுடன் கூடியதும் தகரத்தால் வேயப்பட்டதுமாகிய அந்த அமைப்பில் 1917 ஆவணியில் விநாயகரைப் பிரதிட்டை செய்து வழிபடும் முறைமையை சண்முகர்ஜீபட்டேல் உருவாக்கினார். ஆலயத்தை வலம் வந்து வழிபடக் கூடிய வகை ஒரு சிறிய பிரகாரமும் இருந்திருக்கிறது. இப்போது ஓமகுண்டம் அமைந்துள்ள இடத்திற்கு மேற்காக, இப்போதுள்ள பலிபீடத்தை ஒட்டினாற்போற் கருவறை அமைந்திருந்தது. மண்டபத்தின் வடக்குச் சுவரில் தெற்கு நோக்கிப் பழனியாண்டவர் இருந்துள்ளார். பழனியாண்டவருக்குக் கிழக்கில் ஒரு வேல் இருந்திருக்கிறது.

இந்தக் காலகட்டத்தில் பிக்கறிங்ஸ் வீதியில் பஞ்சலோக வேலை செய்யும் ஆசாரியர் வாழ்ந்து கொண்டிருந்தனர். காலப் போக்கில் அவர்கள் வரதராஜ விநாயகருடன் ஈடுபாடுடையவராயினர். 1921 இல் சண்முகர்ஜீபட்டேல் நாட்டை விட்டுப் போக நேர்ந்த போது தமக்கு உதவியாளராக இருந்தவரும் பஞ்சலோக ஆசாரியர் சமூகத்தைச் சேர்ந்த வருமான இராமகிருஷ்ணன் என்பவரிடம் ஆலயக் கவனிப்பை ஒப்புவித்துச் சென்றார்.

இரண்டாவது உலக மகா யுத்த நெருக்கடிகளுடன் பிக்கறிங்ஸ் வீதிப் பஞ்சலோக வேலை ஆசாரியர் 1943 இல் இடம் பெயர்ந்தனர். அதனால் விநாயகராலய பரிபாலனம் சில ஆண்டுகள் கவனிப்பற்றிருந்தது. இந்த இடைக் காலத்தில், வழிபடுவோர் தத்தம் விருப்பிற்கேற்பத் தாமே வேண்டியவற்றைச் செய்து கொண்டனர். 1944.08.27 இல் தாரண வருடம் ஆனி மாதம் 6 ஆம் திகதி திங்களன்று எழுந்தருளி விநாயகர் உபகரிக்கப்பட்டுள்ளது. வழிபாட்டு முறைமையை ஒரொழுங்கிற்குக் கொண்டுவர விரும்பிய திருமதி சொர்ணம்மா சுப்பிரமணியம் அவர்கள். அர்ச்சகர் ஒருவரையும் நியமனஞ்செய்து பூஜை முறைமையையும் ஒழுங்காக்கினார். 1951 இல் இருந்து பரிபாலகர்கள். அறங்காவலர்கள் என்ற முறைமை நடைமுறைக்கு வந்தது. 1952 இல் இன்றுமுள்ள சிவஸ்ரீ நடராச சோமஸ்கந்தக் குருக்கள் பூசை நடைமுறையினைப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அன்றிலிருந்து சில சில வேளைகளிற் சிறுச் சிறுத் தளர்வு கண்டபோதும்


நியாயமான அளவிற்கு நல்லவண்ணம் நடைபெறுகிற தென்றுதான் சொல்ல வேண்டும்.

1961 – 1962 காலப்பகுதியில் சுவாமி பாலஸ்தாபனம் செய்யப்பட்டுக் கட்டிடம் புனருத்தாரணம் செய்யப்பட்டது. கருவறை இப்போதுள்ள இடத்திற்குச் சென்றது. வசந்த மண்டபமும் இப்போதுள்ள இடத்திற்குத் தகரத் கொட்டகையாகிச் சென்றது. வசந்த மண்டபத்தின் வடமேற்கிலிருந்து கருவறையின் பின்புறமான வடமேற்கைத் தொடும்படி மூலைப் பக்கமாக ஒரு சுவர் அமைக்கப்பட்டது. அந்தச் சுவருக்கும் வசந்த மண்டப மேற்குச் சுவருக்கும் இடைப்பட்ட முக்கோண அமைப்பான பகுதியே பாகசாலையாகப் பயன்படுத்தப்பட்டது. இந்த வகையான வேலைகளும் நிறைவு செய்யப்பட்டு ஆலயத்தின் முதலாவது மகா கும்பாபிஷேகம் 1962.07.10 ஆனி அத்த நட்சத்திரத்தில் பிரதிஷ்டாபூஷணம் நவாலி சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமை தாங்கிய சிவாசாரியார்களால் நிறைவு செய்யப்பட்டது. 1962.08.24 இல் மண்டலாபிஷேகம் நிறைவாகியது.

1963 ஆனியில் வள்ளி தேவசேனா உடனாகிய முருகன் எழுந்தருளி உபகரிக்கப்பட்டது. 1964 ஆனியில் சிவகாமசுந்தரி சமேத நடராசர் மணிவாசகருடன் உபகரிப்பாகியது. ஆலயத்துக் கெனப் புதிய இரதமொன்று செய்விக்கும் முயற்சி 1965 ஆனியில் ஆரம்பமாகி 1967 ஆனியில் வெள்ளோட்டங் கண்டது. 1967 ஆனி வருஷாபிஷேகத்தின்போது ஸ்ரீவரதராஜ விநாயகர் முதன் முறையாகச் சித்திரத் தேரில் வீதியுலா வந்த கண்கொளாக் காட்சியைக் கண்டோம்.

பஞ்சமுக விநாயகர் நூதனப் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் 1972 இல் சிவஸ்ரீ நா. சோமஸ்கந்தக் குருக்கள் அவர்களாலே நிறைவு செய்யப்பட்டது. சிவலிங்கம், கற்பகாம்பிகை, எழுந்தருளி விநாயகர் ஒருவர் 1988 இல் உபகரிப்பாயினர்.

மீண்டும் புனரமைப்பு வேலைகள் தொடர்ந்தன. முக்கோண அமைப்பிற்கு அப்பாற்பட்டிருந்த நிலம் பெறப்பட்டு அந்தப்பகுதி வீதியுடனாக்கப்பட்டு அந்தப் பகுதிக்கு மேற்காகப் பாகசாலை அமைக்கப்பட்டது. இப்போது அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கும் கிழக்கு மேற்கான நிலப்பகுதியும் – முன்னைய ஆலயத்தின் தென்பகுதி – பெறப்பட்டுக் கட்டிடம் இன்றைய நிலைக்கு விஸ்தரிக்கப்பட்டது. அந்தப் பகுதியின் மேற்கே களஞ்சிய அறை அமைக்கப்பட்டது. இந்த வேலைகள் நிறைவு காண்பதற்காக சுவாமி பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருப்பணி தொடர்ந்தது. 1988 நவம்பர் 27 கார்த்திகைப் புனர்பூச நட்சத்திரத்தில் பிரதிஷ்டாபூஷணம் நவாலி சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையிலமைந்த சிவாசாரியர்களால் இரண்டாவது மகா கும்பாபிஷேகமும் நிறைவாக்கப்பட்டது.



பஞ்சமுக விநாயகர்

ஆலயத்தின் மேற்காக உள்ள நிலம் கொள்வனவு செய்யப்பட்டு அழகிய மூன்றடுக்குக் கட்டிடமொன்று அமைக்கப்பட்டு ஐங்கரன் மண்டபம் எனப் பெயர் சூட்டப்பட்டு 1995.01.19 இல் திறந்து வைக்கப்பட்டது திருமணம் முதலான மங்கல கரமான கருமங்களும், பொதுக் கூட்டங்கள் என்பனவும் இந்த மண்டபத்தில் நடைபெறுவதுண்டு. ஆலயப் பிரதம குருவின் வதிவிடமும் இந்த மண்டபத்தின் மேல்மாடியிலே தான் உண்டு.

# ஓரேர் உழவு

-பண்டிதர். ச. சுப்பிரமணியம்-

*"அருண்ணூலும் ஆரணமும் அல்லாதும்*
*ஐந்தின் பொருண்ணூல் தெரியப்புகின்"*

என்பது உமாபதிசிவம் அருளியவாக்கு

அருள் நூல் எனப்படும் சிவாகமங்களும் பொதுநூலெனபபடும் வேதங்களும் மற்றுமுள்ள நூல்களும் ஆகியவை யாவுமே ஐந்தெழுத்தாலே சிவாயநம சுட்டப்படும் பொருளை ஓதும் நூல்களே என்பது பொருள்.

ஐந்து சுட்டும் பொருளாவன, இறைவனும், சத்தியும், ஆன்மாவும், திரோதான சத்தியும், மலங்களுமாம். நூல்செய்பவரும் யானை கண்டகுருடர் கண்டு சொன்னவைபோல தத்தம் அறிவும் அநுபவமும் அமைந்த அளவில் கருத்துக்களைக் கூறுவர்.

இவ்வகையில் எழுந்தவையே பல்வேறு சமயங்களும், சமயத்தத்துவங்களும். பசுக்கள் பலவண்ணமாயிருப்பினும் கறந்தபால் எல்லாம் ஒரேதூய வெண்மையாம். உலகையே எல்லாரும் பார்க்கின்றனர்; ஒரே காட்சிதானே கண்ணுக்குக் கண் வேறாம். உள்ளீடாகிய தன்மை அனைத்தையும் ஏதோ ஒருசத்தி உள்ளிருந்து இயக்குகின்றது என்பது விஞ்ஞானி மெய்ஞ்ஞானியாகிய இருபகுதியாரும் ஒப்புக்கொண்ட உண்மை. இச்சத்தியை ஆண் என்றும் பெண் என்றும் இரண்டும் ஒன்றிணைந்த ஒன்றென்றும் சொல்வர். இது அவ்வவர் அறிவுக் கமைந்த துணிவு.

இந்த நோக்கில் எழுந்த முதுமொழிகளே கல்லைக் கண்டால் நாயைக் காணவில்லை; நாயைக் கண்டால் கல்லைக் காணவில்லை என்பதும்; பொன்னைமறைத்தது பொன்னணி பூஷணம் பொன்னின் மறைந்தது பொன்னணி பூஷணம் என்பதும். விளக்கம் வேண்டியதில்லை.

மேலே சுட்டிய ஐந்து பொருளையும் பற்றிய அறிவுகள் பாச பசு பதிஞானம் என மூன்றாக வகுத்துரைப்பர். பெரும்பாலும் உள்ளநூலும் அவற்றின்பொருளும் பாசமெனப்படும் மாயா காரியமாகிய உலகப் பொருளும் அவற்றின் பயன்பாடு பாசம் பற்றியவையே. இவற்றிலிருந்து பெறும் அறிவெல்லாம் பாச ஞானமாம்.

இதன் மேல் ஆன்மவிசாரம் கொண்டு அதனியல்புபற்றிச் சிந்தித்து ஓரளவு மெய்யுணர்வு தலைப்பட்டோர் உணர்வன உணர்த்த உரைப்பன வாயுள்ள நூல்கள் பசு ஞான வகையைச்சாரும். இவ்வுணர்வு முதிர்ச்சிபெறும் நிலையில் நாம் அடிமைகள் என்றும் எமக்குமேல் எம்மை ஆண்டருள்புரியும் பசுபதி, இறைவன் ஒருவன் உளன் என்றும் ஐயமின்றி உணரும் அறிவு கைவரும்போது பதிஞானம் அரும்பும்.

பதிஞானம் என்ற நல்லநெல் முளை தோன்றுகிறது; இதனைச் செம்மைபெறக்காத்து வளர்த்தால் அது சிவபோதம் என்ற கதிரீன்று சிவபோகமெனற விளைவாகிப் பேரின்பமாம் அநுபவத்துக் குரியதாகும். இதனை வளர்க்கும் போது குறுக்கிடும் இடையூறுகளும் அவற்றைக் களைந்து விளைவு கண்டு பயன்துய்க்குமாறும் அநுபூதிச் செல்வர்களால் காலங்காலமாக எடுத்துரைக்கப் பட்டுவருகிறது. இவற்றைக் காதில் வாங்கிக் கருத்தில் இருத்தத்தவறிப் பயிர்க்காப்பை மறந்து சோம்பி விடுகிறோம். அதனாலே பயனில் உழவராகிறோம். சோம்பலை விடுத்து ஓரேருழ வன்போலக் கண்ணும் கருத்தமாய் ஓம்பிவரின் விளைவு உறுதியாம்.

மாணிக்கவாசகர் திருவாக்கில் இடையூறுகள் பல சுருக்கமாக வருகின்றன

*"தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி*
*முனிவிலாததோர் பொருளதுகருதலும்"*

இதுநென்முளை; இடையூறாவன: ஆறு கோடி மாயா சத்திகள் வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின" "இவைகள் முதலாயின இடையூறுகள். இன்னும்பல, பவ்வேறுருவங்களிலே வருமெனக்காட்டுவர்.

அப்பர் சுவாமிகளும் மெய்ம்மையாம் உழவைச்செய்து" என்பது முதலிய பாடல்களில் விளைவாக்கம் பெறும் வழிவகைகளை வகுத்துரைப்பர்.

இங்கு நாம் படடினத்தார் பாடல் ஒன்று காட்டும் பாங்குகாண்போம்.

*"உழப்பின் வாரா உறுதிகள் உளவோ!*
*கழப்பின் வாராக் கையறவு உளவோ!*
*நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை*
*வேரற அகழ்ந்து போக்கித் தூர்வைசெய்து*
*அன்பென் பாத்தி கோலி முன்புற*
*மெய்யெனும் எருவை விரித்தாங் கையமில்*
*பத்தித் தனிவித் திட்டு நித்தலும் ஆர்வத்*
*தெண்ணீர்பாய்ச்சி ......"*

இன்று அனைத்துலகிலும் மக்கட் பெருக்கம் வரம்புமீறி வளர்ந்துபோவதால் மக்களுக்கான உணவுமுதலான தேவைகளை நிறைவாக்க அரசு பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து நடைமுறைப் படுத்தி வருவதை அறிவோம். அவ்வகையில் முதற்கடமை காடுகெடுத்து நாடாக்குதல். முதற்காரியமான இதுவே அதி சிரமத்தோடு செய்யவேண்டியது. அதனை நன்குணர்த்தும் பொருட்டு இரண்டு வினாக்களை வினாவி விளங்கவைக்கிறார். ஒருவனது அயராத உழைப்பினாலே பெறமுடியாத பேறுகள் எவை? விடாமுயற்சிசெய்பவன் எல்லாம் பெறுவன். அன்றி முயலாது சோம்பராயிருப்பதால் கையிலுள்ளதும் இழந்துபோகுமேயன்றி எஞ்சி எமக்கென்றிருப்பதோர் பொருளுமுண்டோ? எல்லாம் இழப்பாகவேபோகும். முடிவு சோம்பரென்பவர் தேம்பித்திவர்.

மேலே வறும்புலமாய்க் காடுமண்டிக்கிடக்கும் நிலத்தில் உள்ள மரங்களை, வேண்டாதவற்றை ஆழமாக அகழ்ந்து வேரோடுகளைந்து அகற்றுதல். இவ்வண்ணம் எமது நெஞ்சத்தில் நிலைத்துவளர்த்துள்ள அறியாமை முதலிய குற்றங்களை வேரற வீட்டல். இவ்விதத்தால் நெஞ்சம் விளைபுலமாகத் தகுதிபெறும். தூய்மைபெறும்.

தொடர்ந்து அன்பு என்னும் பாத்தி அமைத்து வரம்பு வாய்க்கால் வடிகால் என்பன அமைத்தல் வேண்டும். இச் செயல் வேண்டுவன புறம் போகாமலும், வேண்டாதன உட்புகாமலும் பாதுகாப்பாகும்.

அடுத்துக் கரவில்லாத உண்மை நிலை என்னும் எருவை விளைபுல மெங்கும் பரவிச் செறிந்து பயிருக்கு ஊட்டம் தருமாறு உரமாக்குதல் உகந்தது. மெய்ம்மையெனும் எருவின் சாரத்தை நுகர்ந்தே பயிர் பலிதமாக வளரவேண்டும்.

இங்ஙனம் பண்படுத்திய பின் அங்கே பயிரிடின் விளைவுக்கு ஐயமில்லை. பதிபத்தி என்னும் வித்தைப் பருவத்தே பயிர்செய் என்ற முறையிலே வித்திட வேண்டும். வித்துக்கு வேண்டியவாறு நித்தலும் ஆர்வம் எனப்படும் தெளிந்த நீர்ப்பாய்ச்சல் வேண்டும். உலகின்பங்களை வேண்டிப் பத்திவழிபாடு செய்வது தெளிவில் நீர்ப்பாய்ச்சல். அவனருளையே வேண்டிச் செய்தல் தெளிந்தநீர். தன்கடன் அடியேனையும் தாங்குதல், என்கடன்பணி செய்துகிடப்பதே என அப்பர் சுவாமிகள் விளக்கந்தருகிறார். இதுவே தெளிந்த நீர்மை.

*"..................... நேர்நின்று*
*தடுக்குநர்க் கடங்கா திடுக்கண் செய்யும்*
*பட்டி அஞ்சினுக் கஞ்சி உட்சென்று*
*சாந்த வேலி கோலி வாய்ந்தபின்*
*காமக் குரோதக் களையறக் களைந்து*
*சேமப் படுத்துழிச் செம்மையின் ஓங்கி*
*மெய்ம்மயிர்ப் புளகம் முகிழ்த்திட்டம்மெனக்*
*கண்ணீர் அரும்பிக் கடிமலர் மலர்ந்து*

*"ஏரினும் நன்றால் எருவிடல் கட்டபின்*
*நீரினும் நன்றதன் காப்பு"*

நன்றாக ஆழ உழுது பண்படுத்தி, எருப்பரப்பி, களைகளைக் களைந்து, வேண்டும் போது நீர்ப்பாய்ச்சி இவை அனைத்தின் மேலும் பயிர்ப்பாதுகாப்பும் அவசியம் என அடுக்கிக் கூறிய கடமைகள் இப்பாடலில் எடுத்துரைக்கப்படுவது நல்விருந்தாம்.

இன்னும் இக்கனிக்கு இணையான ஒருமலரின் மாண்பு திருவாசகத்தோடு ஒட்டி உணரத்தகுவதாகும்:

*"தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேனுண்ணாதே*
*நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்*
*அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன் சொரியும்*
*குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"*

அரசவண்டே அற்ப தேனுள்ள பூக்களைத் தேடியலையாதே பெருந்தேன் இடையறாது சொட்டும் கூத்தப் பெருமானின் திருவடிமலரிலே சென்றிருந்து தேனை நுகருதி என்கிறார்.

நினைத்தாலும், கண்டாலும், பேசினாலும், இடையறாது களிப்பூட்டும் ஆனந்தத்தேன் சொட்டுவது இந்த அரனடிப்போது.

இதன் பூரண விளைவான பயன் பெரிய புராணம் பேசக் கேட்டு அமைவாம்.

*படியில் நீடும் பத்திமுதல் அன்பு நீரில் பணைத்தோங்கி*
*வடிவு நம்பி யாரூரர் செம்பொன் மேனி வனப்பாகக்*
*கடிய வெய்ய இருவினையின் களைகட் டெழுந்து கதிர் பரப்பி*
*முடிவி லாத சிவயோகம் முறுகி முதிர்ந்து விளைந்துளதால்.*

திருத்தொண்டர் புராண சாரம் இதுவே.


கொழும்பு கொட்டாஞ்சேனை

*அருள்மிகு ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலயம்*

மாதந்தோறும் நடைபெறும் விழாக்களும், விரதங்களும்

| | | |
|---|---|---|
| சித்திரை | : | வருடப்பிறப்பு, சித்திராப் பௌர்ணமி, சித்திரைச் சித்திரை |
| வைகாசி | : | வைகாசி விசாகம் |
| ஆடி | : | ஆடிப்பூரம் |
| ஆவணி | : | விநாயக சதுர்த்தி, ஆவணிச் ஷஷ்டியைத் தொடர்ந்து 20 நாள் இலட்சார்ச்சனை. இருபத்தோராவது நாள் கணபதி ஹோமம். |
| புரட்டாதி | : | சனிவிரதம், நவராத்திரி |
| ஐப்பசி | : | கந்த ஷஷ்டி |
| கார்த்திகை | : | வருடாபிஷேகம் (மணவாளக் கோலம்), மறுதினம் சங்காபிஷேகம், மறுதினம் பிள்ளையார் ஊஞ்சல் வயிரவர் மடை |
| மார்கழி | : | திருவெம்பாவை. |
| தை | ; | தைப் பொங்கல், தைப்பூசம். |
| மாசி | : | சிவராத்திரி, மாசிமகம். |
| பங்குனி | : | பங்குனி உத்தரம். |

குறிப்பு : *வெள்ளிக்கிழமைதோறும் கூட்டு வழிபாடு. ஒவ்வொரு மாதமும் கார்த்திகை திருவிழா மாதந்தோறும் சதுர்த்தி விழா ஆய மூன்று நிகழ்வுகளுந் தொடர்ந்து நடைபெறுபவை.*

# தொன்மை வாய்ந்த ஸ்ரீவரதராஜ விநாயகப் பெருமான் ஆலய வரலாறு

-எச். எச். விக்கிரம சிங்க-

"சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் பிரசன்ன வதனம் த்யாயேச் ஸர்வ விந்நோப சாந்தயே"

என்று நாளும் பொழுதும் நாம் போற்றித் துதிக்கும் விநாயகப் பெருமான் தென் கைலாயமெனப் போற்றப்படும் கொழும்பு மாநகரிற் கப்பித்தா வத்தையிற் பாலவிநாயகர் என்றும், பேலிய கொடையிற் பூபால விநாயகர் என்றும், கொட்டஞ்சேனையிற் ஸ்ரீ வரதராஜ விநாயகர் என்றும் பல்வேறு நாமங்களுடன் அமர்ந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றான்.

இன்று தலவிருட்ச மகிமையுடன் விநாயகப் பெருமானின் முக்கியமான உறைவிடங்களில் ஒன்றாகக் கருதப்படும் கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகப் பெருமானின் ஆதி வரலாறு புராதன தொன்மை வாய்ந்ததாகும்.

எல்லாளன், துட்ட கைமுனு ஆட்சிக்காலத்திற்கு முன்பே இந்த ஆலயம் நிறுவப்பட்ட தென்றும், அக்காலத் தமிழ் மன்னர்கள் இக்கோயிலைப் பெருமதிப்புடன் போற்றிப் பேணிவந்துள்ளனர் எனவும், பின்னர் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்திற் போர்த்துக்கேய வீரர்கள் யுத்தகாலங்களில் இக்கோயிலில் சரணடைந்து பதுங்கி வாழ்ந்து வந்துள்ளார்கள் எனவும், பின்னர் வந்த டச்சுக்காரர்களும் மூல விக்கிரகங்களையும் சிலைகளையும் அப்புறப்படுத்தித் தங்களது பிரதான உறைவிடங்களில் ஒன்றாகவும் பாதுகாப்பு அரணாகவும் கொண்டிருந்தார்கள் எனவும் கூறப்படுகிறது. இதற்கு சரித்திர ஏடுகளிலிருந்து குறிப்புகள் கிடைத்து இருக்கின்றன.

இக்கோயிலுக்கு நிழல் கொடுக்கும் அரச மரம் சுமார் 350 ஆண்டுப் பழைமை கொண்டது. துறைமுகத்தை அடுத்து இருந்த காரணத்தினால் இந்த ஆலயம் அந்நியரின் பெரும் கோட்டையாகப் பயனளித்து வந்து இருக்கிறது.

அந்நியரின் ஆட்சிக் காலங்களில் சிதைத்து சின்னா பின்னமாக்கப்பட்ட இந்த ஆலயம் அன்று வாழ்ந்த சைவப் பெருமக்களின் சமய உறுதிப்பாட்டினால் இன்றுவரை மறையாது காப்பாற்றப்பட்டு வந்துள்ளது.

கொழும்பு மாநகரைப் பொறுத்தவரையில் இந்தக் கோயில் மிகவும் தொன்மை வாய்ந்ததாகும். பலவருடகாலமாகத் தனியாரின் கீழ்ப் பரிபாலிக்கப்பட்டு வந்த இவ்வாலயம் 1959 ஆம் ஆண்டின் பின்னர் பொதுமக்ககளின் உரித்தாக்கப்பட்டு மூவர் அடங்கும் அறங்காவலர் குழுவின் கீழ் மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது.

நன்றி வீரகேசரி.

# நினைக்க நினைக்க நெஞ்சம் உருகுதே

முருகவே பரமநாதன்

இசைப்பாடல்களாய் அமைந்த ஒன்பது திருமுறைகளுள் திருவாசம் ஏனையவற்றினின்றும் வித்தியாசமான அமைப்பு உடையது. அது மாணிக்க வாசக சுவாமிகளின் தமிழ். அவர் இறைவனைத் தமிழ்(ச்) செய்தார். சுவாமிகள் இறைவனை நினைந்து உருகினார். இறைவன் அவரை உருக்கி புதுப் பாத்திரமாக்கினார். பெருந்துறைப் பிள்ளை இறைவனிடம் கெஞ்சினார். கெஞ்சிக் கேட்டவர்க்கு எக் கல்நெஞ்சனும் உதவுவர். மாணிக்கவாசகர் கொஞ்சினார் காதல் வயப்பட்டுக் கள்ளோ காவியமோ என்றபடி, கோவை ஒரு காதல் நெறி காட்டிய நாயக நாயகி பாவம். வாதவூரர் கொஞ்சுதமிழ் மூலம் எம் நெஞ்சிற் புகுந்தார். எனவே திருவாசகம் எம்மை அழ வைக்கிறது, தொழ வைக்கிறது, தொழும் பனாக்குகிறது. எங்கள் மனமும் முக்கிய கட்டங்களிற் கொஞ்சிக் கேட்கிறது. வேறு யாரையுமல்ல; எமையாளுடை ஈசனை, எல்லாம் கடந்த நிலையிற் கெஞ்சவும் செய்கிறது. அவனது திருவடிகளை , திருக்கரங்களை , ஏன் அவனையே கொஞ்சி எம்மை மறக்கிறோம். எம்மை மறைத்த மாமதயானை மருண்டு, ஓடி மறைகிறது. இந்த நிலை திருவாசகத்தோடு கொஞ்சியதால் ஏற்பட்ட மெய்ப்பாடு, பாவம் எனலாம். இந்த ஆளுமை எதனால் வந்தது! தேனூறும் வாசகம் எம் நெஞ்சோடு கொஞ்சிவிஞ்சியது. அதன் அடி நாதம் நாம் மனிதர்கள், எமக்கு மனம் என்று ஒன்று இருக்கிறது. மனமற்ற நிலைவர கப்சிப் என்று இருந்து விடலாம். எனவே நாம் பாக்யசாலிகள். நமக்குத் திருவாசகம் படிக்க வாய்ப்புக் கிடைத்தமை. உண்ணிடும் போதும், உறங்கிடும் போதும், உயிருளம் துடித்திடும் போதும், தொழில் பண்ணிடும் போதும், திருநீறுபூசும் போதும், நடக்கும் போதும், இருக்கும் போதும், கண்ணினுமினிய கடவுள் நினைப்போடு வாழ வேண்டும் என எம் சைவம் பேசுகிறது. இந்த நினைப்பையுடைய ஒவ்வொருவரும் திருவாசகத்தில் ஒரு வாசகத்தையேனும் தெரியாமல் இருப்பார்கள் என்று எண்ண எந்த வித ஏதுவும் இல்லை. இந்நிலையில் திருவாசகத்தை நினைக்க, படிக்க பாட, கேட்க, எண்ண, மௌனமாய் உள்ள, நாவசையாது படிக்க, இசைக்க, நெஞ்சம் உருகுகிறது. நீங்கிடாது கண்ணீர் பெருகுகிறது. இறைவனிடம் இரக்க வைக்கிறது. இந்த இரப்பு நெஞ்சத்தை நிரப்புகிறது. மெய்ப்பாடு பிறக்கிறது. இதோ ஒரு இரப்பு.

*இரந்திரந்துருக என் மனத்துள்ளே*
*எழுகின்ற சோதியே இமையோர்*
*சிரந்தனிற் பொலியும் கமலச் சேவடியாய்*
*திருப்பெருந் துறையுறை சிவனே*
*நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்*
*ஆயவை அல்லையாய் ஆங்கே*
*கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்*
*கண்ணுறக் கண்டுகொண் டின்றே*

*கோயில் மூத்த திருப்பதிகம் 6*

இரப்பு பற்றி வள்ளுவர் தொட்டு பாரதி வரை அச்சுறுத்தினர். கொண்டானையல்லாது கொடுப்பானை இகழ்வாரில். இது உணவு, உடை, பணம் என்ற வகையில் அமையலாம். திருவாசகம் பேசும் இரப்பு பெரிய இடத்துச் சம்பந்தம். இறைவனே பிச்சாண்டி. இரந்தும் இரப்பானுக்குக் கொடு என்று தானே சாத்திரம் கூறும். தோத்திரமான திருவாசகம் இறைவனிடம் இரக்கும் பாணியையும், இறைவன் கொடுக்கும் பாணியையும் பேசுகிறது. இரந்து நிற்போம் சுரந்து கொடுப்பான் இறைவன். இரப்பு நேரான நோக்கில் அமைய வேண்டும். ஏழைபங்காளன் அவன்.

*ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்*
*பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே*
*ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்*
*தாழைப் பறித்தவா தோணோக்கம் ஆடாமோ*

*திருத்தோணோக்கம் 13*

திருவாசகம் எழமுன் வாழ்ந்தவர்கள் உண்மையில் அபாக்கியசாலிகள். நாமோ பெரும் பாக்கியசாலிகள். ஆம் திருவாசகத்தைத் தொட்டாலே மனம் கரைகிறது. எனவே சுந்தரம் பிள்ளை சொன்னார் மனங்கரைந்து மனங்கெடுக்கும் வாசகம் என. உண்மையிலே திருவாசக மின்காந்த அலையை உடம் பென்னும் காந்த வயலிற் பாய்ச்சினால் இறைமயமே. வயல் எனின் ஷேத்திரம் எனவும் பொருள். நம்மானிடதிரேகம் ஒரு ஷேத்திரம்தான். இறைவனைக் கெஞ்சும் கட்ட மொன்று மாதிரிக்கு

*கொம்பரில் லாக்கொடிபோல் அல*
*மந்தனன் கோமளமே*
*வெம்புகி ன்றேனை விடுதிகண்*
*டாய்விண்ணர் நண்ணுகில்லா*
*உம்பருள் ளாய் மன்னும் உத்தர*
*கோசமங் கைக்கரசே*
*அம்பர மேநில னேயனல்*
*காலொடப் பானவனே*

நீத்தல் விண்ணப்பம் 20

திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது நெடுங்கால வழக்கு. மாணிக்கர் உருகினார் பருகினார்.

*உருகிப் பெருகி உளம்குளிர முகந்துகொண்டு*
*பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை*

திருத்தெள்ளேணம் 15

*வான நாடரும் அறியொ ணாதநீ*
*மறையி னீறுமுன் தொடரொ ணாதநீ*
*ஏனை நடருந் தெரியொ ணாதநீ*
*என்னை இன்னிதா யாண்டு கொண்டவா*
*ஊனை நாடகம் ஆடு வித்தவா*
*உருகி நானுனைப் பருக வைத்தவா*
*ஞான நாடகம் ஆடு வித்தவா*
*நைய வையகத் துடைய இச்சையே.*

திருச்சதகம் 95

*பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்*
*பரிந்துநீ பாவியே னுடைய*
*ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி*
*உலப்பிலா ஆனந்த மாய*
*தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த*
*செல்வமே சிவபெருமானே*

பிடித்த பத்து 9

*என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட*
*ஈசனே மாசிலா மணியே.*

பிடித்தபத்து 10

நமது நாளாந்த வாழ்வில் எத்தனைக்காக வெல்லாம் உருகிப் போகிறோம். பெண்ணென்றும் மண்ணென்றும், பொன்னென்றும் பொருளென்றும்..... ஆயின் மணிமொழி பாடிய உருக்கத்தை நாமனுபவித்தோமா? இந்நெறியிலே அழுதோம் தொழுதோம் விழுதென உருகினோம். ஆனாற் பொய்ய ழுகைளை விட்டு உண்மையழுகை நம்மிடம் இருந்ததா? இருக்கிறதா? அழுதால் அவனைப் பெறலாமேயெனப் பாடுகிறதே வாசகம் போக போக்கியத்தை விட்டு புனித வாழ்வுக்காக அழும் பான்மை திருவாசகத்தில் நிறையக் காணலாம். இவ்வண்ணமே சுவாமிகளின் குழைவான தமிழால் நாம் வாழைப்பழமாக மனம் கசிகின்றோம். இந்தக் கசிவும், கரைவும், உருக்கமும் மணிமொழி வழிவந்த ஒழுக்கம். அதனால் விழுப்பம் நமக்குத்தானுண்டு. மீனுக்கு நீர் வேண்டும். தேனுக்குச் சுவை வேண்டும். ஊனுக்கு உயிர் வேண்டும். மானுக்குப்புள்ளி வேண்டும். உயிர்க்குக் காற்று வேண்டும். நம் வாழ்வுக்கு இறை வேண்டும். இறையோடியைந்த இன்பம் உறையோடி யைந்த வாள்தான். இன்பத் தோடியை வாழ்வுக்குத் துணைதான் திருவாசகம். திரு சேர்ந்தாற் சேராதன உளவோ. மணிவாசகப் பெருந்தகை கீதமினிய குயிலோடு தமிழிற் பேசினார், அவர் தமிழானார். இறைவன் தமிழன் ஆனார். மொழிபோல வழிகாட்ட வேறெந்தக் கைவிளக்குமில்லை.

*கீதமினிய குயிலே கேட்டியேல்*
*எங்கள் பெருமான்*
*பாதமிரண்டும் வினவிற் பாதாளம்*
*ஏழினுக் கப்பாற்*
*சோதிமணி முடி சொல்லிற் சொல்லிறந்து*
*நின்ற தொன்மை*
*ஆதி குணமொன்று மில்லான் அந்தமி*
*லான் வரக் கூவாய்*

குயிற்பத்து 1

*நீலவுருவிற் குயிலே நீள்மணி*
*மாடம் நிலாவும்*
*கோல அழகில் திகழுங் கொடிமங்கை*
*உள்ளுறை கோயில்*
*சீலம் பெரிதும் இனிய திருவுத்*
*தரகோச மங்கை*
*ஞாலம் விளங்க இருந்த நாயக*
*னைவரக் கூவாய்.*

குயிற்பத்து 3

குயில் செய்த பாக்கியம் நமக்கில்லையே! ஆக உருக்கம், இரப்பு, கெஞ்சுதல், நிறைந்த திருவாசக நெறியில் திருக்கோவையும் தமிழால் பரிமளிக்கின்றது. இறையனார் களவியல் என்னும் நூற்கு உரை வகுத்த நக்கீரர் இந்நூல் என்னுதலிற்றோ வெனின் தமிழ் நுதலிற்று என்பது என்று கூறினர். இவ்விடத்துத் தமிழ் என்பது அகப்பொருளையும் அவ்வாற்றால் இன்பத்தையும் உணர்த்துவதையும் அறியலாம். அவ்வின்பம் மக்கள் நுதலிய சிற்றின்பமே யாயினும் பேரின்பத்துக்கு வாயிலாய் அமைவது. மாணிக்க வாசகர் பாடியருளிய திருக்கோவையாரும் தமிழ் நுதலிய நூலேயாம். இரு பிரபந்தங்களும் திட்பம், நுட்பம், ஒட்பமென்ற நூற்பண்பு நிறைந்தவை. நெஞ்சுக்கு தட்பமளிப்பவை. தைரியம் தருபவை. இன்றைய இலக்கியகாரர் இலகு, எளிமை, தெளிவு, இனிமை சேர எழுதுங்கள் என்கிறார்கள். நாம் வலிமையும் வாழ்வும் பெற மணிவாசகர் வாக்கில் வளர்ந்த வாசகமும் கோவையும் நல்ல நெறியாள்கை ஆகும்.

*சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்*
*உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்டீந்தமிழின்*
*துறைவாய்ப் நுழைந்தனை யோஅன்றி ஏழிசைச் சூழல்புக்கோ*
*இறைவா தடவரைத் தோட் கென்கொலாம் புகுந்தெய்தியதே*

திருக்கோவையார்.

உணர்ந்தார்க்குணர் வரியோன் என்பதற்குப் பேராசிரியர் எழுதிய உரையையும் கண்டு படிப்போர் உணர்தற்கரிய உட்பொருள் காண்பர். மனித விழுமியங்களைத் தேடி அலுக்கும் இக்காலகட்டத்தில் மனிதம் காத்து மக்கட் பண்பை வளர்த்து வாழ்வளிக்கும் தேனூறும் வாசகமும் நாவூறும் கோவையும் நமக்குக் கிடைத்த உடன் வெண்ணெயாகும். வெண்ணெய்யை உருக்க நெய் ஆகும். இதை மனதிற் கொண்டு கடைத்தேறுவோம். ஆக, நினைக்க நினைக்க நெஞ்சம் உருகுதே, நீங்கிடாத கருணை பெருகுதே வாதவூரர் தந்த தமிழில் நாமும் உருகி, இரந்து, கெஞ்சி, கொஞ்சி வாழ்வோம்.

*தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாடொறும்*
*நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்*
*மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே*
*ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூரெம் அடிகட்கே*

சுந்தரர் தேவாரம்

*சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்*
*கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்று*
*ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன், உள்ளுருகி*
*தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்*
*வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி*
*ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்.*

திருவம்மானை 17

கொழும்பு கொட்டாஞ்சேனை

# அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்

# அறநெறிக் கல்வி வளர்ச்சி

- ம. நடராசா -

அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாளர்

*"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

✧ சைவம் பரிமளிக்கச் சைவாலயங்களைச் சிறப்புற வழி நடத்தும் நல்ல – நேரிய எண்ணங் கொண்ட அறங்காவலர்களும், ஒழுக்க நெறிநிற்கும் அந்தணப் பெருமக்களும் வேண்டும். கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் இந்த வகைச் சிறப்புக்களுடனாயது.

✧ ஆலய நிர்வாகம், ஆலயச் சூழலிலுள்ள சைவச் சிறுவர்களுக்கு, அவர்கள் எதிர்காலம் வளமுடையதாக வேண்டும் என்னும் நோக்குடன், அறநெறிக் கல்வியைப் பெறும் நிலையமொன்றை இயக்குகின்றது.

✧ இராமகிருஷ்ணமிஷன்சுவாமி ஆத்மகணானந்தஜி அவர்கள் அருளாசியுடனும், இந்து கலாசார அமைச்சு திருமதி இராஜலட்சுமி சைலயநாதன், அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன், என்போரின் வாழ்த்துக்களுடனும், அறங்காவலர்களின் ஆரம்ப உரையுடனும் கடந்த 1996 – 08 – 18 ஆந்தேதி இக்கல்வி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது.



அறநெறிக் கல்வி நிலைய நாடகம்

✧ கடந்த இரண்டரை ஆண்டுகளில் இந்த நிலையம் நல்ல வளர்ச்சி கண்டுள்ளது.150 மாணவர்களுடன் ஆரம்பித்த கல்வி நிலையம் இன்று 250 மாணவர்களுடன் மிளிர்கின்றது. அன்று கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவினராக்கப்பட்ட பிள்ளைகள், ஆசிரியர்கள் மூவராற் பயிற்றப்பட்டனர். இன்று பாலர் பிரிவு (அ), பாலர் பிரிவு (ஆ), கீழ்பிரிவு, மத்திய பிரிவு மேற்பிரிவு என ஐந்து பிரிவினராகப் பிள்ளைகள் பிரிக்கப்பட்டு அதிபர் உட்பட ஐவர் ஆசிரியர்களாற் கற்பிக்கப்படுகின்றனர்.

✧ ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் கல்வி நிலையம் செயற்படும். காலை 8.15 க்கு ஆரம்பிக்கும் பயிற்சிநெறி நண்பகல் 12.00 க்கு நிறைவுறுகின்றது. இடையே 10.20 க்கு இடைவேளை. இந்த இடைவேளையிற் குளிர் பானமும் சிற்றுண்டியும் வழங்கப்படுகிறது.

✧ ஆரம்ப நேரத்தில் முதலிற் பூஜை நடைபெறும், பின்னர் அறநெறித் தீபம் ஏற்றப்படும்.

தொடர்ந்து அறநெறிக் கீதம் இசைக்கப்படும். தியானம், காயத்திரி மந்திரம் தியான சுலோகம் உச்சரித்தல், நடைபெறும். இத்தியான மந்திரங்கள் அன்றைய திருநாளை பொறுத்து இடம் பெறும். (உ+ம்) பிரதோஷமானாற் சிவன் மந்திரம் நடைபெறும்.



அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பரீட்சையிற் பங்கு கொள்கின்றனர்.

- நற்சிந்தனை கூறும் வழக்கமும் உண்டு. இது அறங்காவலர், அல்லது வருகை தந்துள்ள சைவப் பெரியார், அதிபர் என்போருள் ஒருவராற் செய்யப்படும்.

- ஒன்பது மணிக்குப் பாடங்களுடனான வகுப்புக்கள் ஆரம்பமாகும். நேரசூசிகை நான்கு பாடவேளைகளைக் கொண்டது.

- பண்ணிசை, சைவவினாவிடை (நாவலர்), திருக்குறள், ஔவையின் மனுதத்துவம், உலகநீதி, இராமாயணம், மகாபாரதம், பாடசாலைச் சமயபாடநூல், என்பவை எல்லா மாணவர்களுக்கும் பொதுவாகக் கற்பிக்கப்படும். மேற்பிரிவு மத்திய பிரிவினர்க்குப் பாகவதம், திருமந்திரம், திருவருட்பயன், நாலடியார், யோகர் சுவாமிகள் நற்சிந்தனைகள், தெய்வீகக் கதைகள், இந்து சமய கலாசார அமைச்சால் வெளியிடப்படும் நூல்கள் கற்பிக்கப்படும்.

- குருபூசைகள் சிறப்பாக நடைபெறும். பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசில்களும் வழங்குவோம். புலவர்கள் பெரியார்கள் என்போரும் நினைவு கூராப்படுவர்.

- நவராத்திரி விழா கொண்டாடப்படும். பட்டிமன்றம், வில்லிசை, நடனம், பண்ணிசை, நாடகம், கவியரங்கு முதலிய நிகழ்வுகளும் இடம் பெறும்.

- பிள்ளைகளின் எதிர்கால நன்மை கருதிச் சேமிப்புத் திட்டம் ஊக்குவிக்கப்படுகிறது. ஒரு தொகையை நாம் வைப்பிலிடுகின்றோம்.

- கொப்பிகள் பென்சில்கள் என்பன பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்றன.

- கோலம் போடும் போட்டியும் நடைமுறைப் படுத்தப்படும். வெளிவாரிப் பொதுப் போட்டிகளிலே கலந்து கொண்ட மாணவர்கள் பலர் பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

- ஒழுக்கம் பெரிதும் போற்றப்படுகின்றது.

- ஆலயத்தில் வெள்ளிக்கிழமைக் கூட்டுப் பிரார்த்தனை மாணவர்களால் நடத்தப்படுகின்றது.

# மானக்கஞ்சாற நாயனார்

- சிவ சண்முகவடிவேல் -

சிவபிரான் ஆகாய கங்கையைச் சடாமுடி மீது தாங்கியவர். கஞ்சாறூரில் தாமாக விரும்பி எழுந்தருள்வர். கஞ்சாறூர் செந்நாப் புலவர் பாடும் பெருமை உடையது.

மரங்கள் கொம்புத் தேன் பொழியும்; கனிகளில் சாறு ஒழுகும்; வயலில் கரும்புச் சாறு வழியும்; எல்லாம் ஆறாகிப் பெருகும். கஞ்சாறூர் இனிய மணங் கமழ்ந்து விளங்கும். மண்ணும் நீரும் வளஞ் சிறந்த வயல்கள் அயலில் உள. மாடங்கள் பலமணி ஒளியால் சூழ்ந்திருக்கும். மதிலாலும் சூழ்ந்திருக்கும். அரங்குகளை அழகிய துகிற்கொடிகள் அணி செய்யும். நகிற் கொடிகளும் நடமாடும். சிலவீதிகளில் மலரம்புகள் வழிச் செல்வோருடைய புலன்களை மயங்க வைக்கும்.

உழவுத் தொழில் மிக்க பெருங்குடிகள் நெருங்கியது கஞ்சாறு. மயிலின் சாயலனைய மகளிர் மனைகளில் நடமாடுவார்கள். அதற்கிசைய முழவு ஒலிக்கும். நீண்ட தோரணங்களும் நிறைகுடமும் வீதிகளை அலங்கரிக்கும். அவை மிகுதியான விழாச் சிறப்புக்களைக் காட்டும்.

மானக்கஞ்சாறனார் அப்பதியில் அவதாரஞ் செய்தார். பரம்பரையாக அரசரது சேனாதிபதியாகக் கூறத்தக்கது அவர் குடி. அவர் மெய்ப்பொருளை நன்கு உணர்ந்து கொண்டார். மானக்கஞ்சாறனாருடைய வடிவம் பணிவுடைமையை வெளிப்படுத்தும். பாம்பினோடு சந்திரனைத் தரித்த பரம்பொருளுக்கு ஆளானவர். மெய்யடியார்களுக்கு விருப்புடன் ஏவல் தொண்டு புரிவார்.

அரி அறியாத மலர்ப்பாதங்களை அறிவதன்றி வேறு ஒன்றும் அறியாதவர் அப்பெரியவர். அவருக்கு முன்பு சில காலம் பிள்ளைப் பேறு இல்லை. பிள்ளை வரும் பொருட்டுப் பெருமானின் திருவடிகளை மனத்தில் வழிபட்டு வந்தார். கூத்தப் பெருமானின் திருவருள் வாய்க்கப் பெற்றது. மழைக்கு உதவும் கற்புடைய அவர் மனையாள் ஒரு பெண் கொடியைப் பெற்றெடுத்தார். பிள்ளைப் பேற்றால் பெருமகிழ்ச்சியிற் சிறந்தார்கள். கஞ்சாறு களிப்பால் மிளிர்ந்தது. மங்கல வாத்தியம் இயம்பியது. சிவனடியார்கள் கொடை பெருகியது. தாதியர்கள் தாலாட்டுகின்றார்கள். கஞ்சாறனார் பொற்கொடியை வளர்க்கின்றார்.

மறுவில் குலக்கொழுந்தினுக்கு மணப்பருவம் வந்தெய்தியது. திருமகளின் மேலாகத் திகழ்ந்தாள். செம்மணியின் தீபம் போல் பிரகாசித்தாள்.

அவர்களுக்கு ஒத்த குல மரபினராக் கலிக்காமனார் விளங்கினர். சிவபிரானிடத்து அன்பில் சிறந்தவர். பெரியோர்கள் அவருக்கு மணம் கேட்டு வந்தார்கள். வந்த மூதறிவோரை மானக்கஞ்சாறனார் வரவேற்றார். அவர்கள் ஒரு மகளை ஏயர்கோன் கலிக்காமனாருக்கு மணத்திறம் கேட்டார்கள். "இம்மணம் எங்கள் மரபினுக்கு ஒக்கும். ஏற்றுக் கொள்ளத்தக்கது." என்று மனமகிழ்ந்து உடன்பட்டார். மதிநூல் வல்லவர் இருவீட்டார்க்கும் பொருத்தமாகத் திருமண நாள் வகுத்தார். கஞ்சாறர் திருமணச் செயலைத் தொடங்கினார். சுற்றத்தவர்கள் மகிழ்ச்சியோடு வந்து கூடினார்கள். பொற்கலங்களில் முளைப்பாலிகை பூரித்தார்கள். நகரம் விழாக் கோலம் பூண்டது.

திருமண நாள் வந்தது. ஏயர்குலப் பெருமான் கைப்பிடிக்க வருகின்றார். மங்கல வாத்தியங்கள் முழங்குகின்றன. மணமகன் மஞ்சு சூழும் மலர்ச்சோலை கஞ்சாறூரில் வந்து கொண்டிருக்கின்றார்.

தேவர் பெருமான், மணமகள் மனையில் எழுந்தருளினார். உலகம் உய்வடைய மாவிரத முனிவராக மறைந்து வந்தார். நெற்றியின் மீது திரிபுண்டரமாகத் திருநீறு. முண்டித்த தலை. சிகை முடியில் கோத்து அணிந்த என்புமணி. திருச் செவியில் குண்டல அசைவு. திருமார்பில் என்பு மணிகளாலான தாழ்வட ஒளி. திருத்தோளில் யோக பட்டிகை – உத்தரியம். கரிய மயிரினால் முறுக்கப்பட்ட பூணூல்வடம், திருக்கரத்தில் திருநீற்றுப்பை. மெய்யடியார்களின் பாவத்தைப் பாழாக்கும் – அது. ஒரு முன் கையில் ஒருமணி கோத்த பிரகாசிக்கும் நூல். அரையில் வேதக் கோவணம். அதன் மேல் திருவாடை. திருவடியில் பஞ்ச முத்திரை. நெருப்பில் பூத்த நீறு போலத் திருமேனியில் நீற்றொளி. மாவிரத கோலத்தோடு கஞ்சாறனார் அகம் புகுந்தார்.

கஞ்சாறனார் கண்டு எதிர் எழுந்தார். களி சிறந்து, "எம்பிரானே! புரிதவத்தீர் எழுந்தருளப் பெற்றது என் தவப்பேறு. அடியேன் உய்வடைந்தேன்". என்று உரைத்துப் பெரிதும் உள்ளம் உருகினார். "எந்தை பிரான் எழுந்தருளிற்று. அடியேன் பிழைத்தேன். "என்று பாதங்களிற் பணிந்தார் கஞ்சாறனார்.

நற்றவராம் நம்பர் நலமிகும் அன்பரை நோக்கினார். "இங்கே நிகழும் மங்கலச் செயல் என்ன?" என்று வினாவினார். "யான் பெற்றதொரு பெண்கொடி தன் வதுவை நிகழ்வு." "உமக்கு மங்கலம் உண்டாகுக" என வாழ்த்தினார் தூமறை பாடும் வாயார்.

கஞ்சாறர், தேனக்க மலர்க் கூந்தற் திருமகளை அழைத்து வந்தார். தெண்ணிலா மறைத்து வந்த முனிவரை வணங்குவித்தார். முனிவர் தமது திருவடியில் பணிந்து எழுந்த மடக்கொடியின் கூந்தலை நோக்கினார்.

"இவள் தெய்வப் பெண். அவள் கூந்தல் நமது பூணூலுக்கு மிகப் பொருந்தும்" என்றார். கஞ்சாறர் உடைவாளை உருவினார். "கூந்தல் பெருமானுக்குப் பயன் தரும் பேறு பெற்றேன்". எனக் கருத்திற் கொண்டார். மகளாரின் கூந்தலை அடியோடு அரிந்தார். எதிர்நின்ற, மயக்கப் பிறப்பை மாற்றுவார் மலர்க் கரத்தில் நீட்டினார்.

வாங்குவார் போல் நிறை மறைப் பொருளார் மறைந்தனர். பார்வதி அம்மையாரோடும் பழைய இடபத்தில் விளங்கினார். உயர்ந்த வான்மீது வந்தார். மண்ணும் விண்ணும் மலர்மாரி பொழிந்தது. தொண்டனார் தொழுதார். எதிர் வீழ்ந்தார்.

*"வாங்குவார் போனின்ற மறைப் பொருளா மவர் மறைந்து*
*பாங்கின் மலை வல்லியுடன் பழையமழ விடையேறி*
*யோங்கியவிண் மிசைவந்தா ரொளிவிசும்பு நிலநெருங்கத்*
*தூங்கியபொன் மலர்மாரி தொழும்பர்தொழு தெதிர்விழுந்தார்."*

என்பது அருண்மொழித் தேவரின் பொருண்மொழி. "உனக்கு எம்மிடத்தில் எழும் அன்பினை நாம் அறிவோம். அத் தன்மையினைச் செழும் புவனங்கள் எங்கும் செறியச் செய்தோம்." கஞ்சாறனார் மனம் வாக்குக் காயம் ஒன்றுபட்டார். உச்சியின் மீது கைகளைக் கூப்பினார். பெருங்கருணைத்திறம் போற்றும் பெரும் பேற்றினை நேர் பெற்றார். இமையோர்கள் சூழ்ந்து துதி செய்தார்கள். இண்டைவார் சடையார் தொண்ட னாருக்கு அருள்புரிந்தார். அவர்முன் மறைந்தார்.

கலிக்காமர் கண்டவர்கள் களிப்பெய்த வருகின்றார். அங்கு நிகழ்ந்த செயற்கருஞ் செயலைக் கேட்டார். சிந்தை களிப்பெய்தினார். புனிதனார் அருளைப் போற்றினார். அக் காட்சியினைக் காணும் பேறு கிட்டவில்லையே என மனந் தளர்ந்தார். "மற்றுமக்குச் சோபனமாகுவ" என்று பெருமான் அருள் செய்த திறம் கேட்டார். மனந் தளரும் இடர் நீங்கப் பெற்றார்.

தேவ நாயகர் திருவருளால் மணவாட்டியின் அரிந்த மலர் சூடிய கூந்தல் வளரப் பெற்றது. பூங்கொடி போல்வாரைக் கலிக்காமர் மணம் புணர்ந்தார். இரவலர்களுக்கு ஈகையின் தலைநின்றார். பெருவதுவை உலகெலாம் சிறந்து ஓங்கியது. சுற்றத்தவர்கள் சூழ்ந்து சென்றார்கள். கலிக்காமர் மதில் சூழ்ந்த மூதூரினைச் சென்று சேர்ந்தார்.

திருவாசகச் சிந்தனை

# திருச்சாழல்

- பண்டிதர் சி. அப்புத்துரை -

சாழல் - மகளிர் விளையாடும் விளையாட்டுகளுள் ஒன்று. பலர் இரண்டு பகுதினியினராகப் பிரிந்து நின்று விளையாடுவது என்பது ஒரு கருத்து. ஒரு திறத்தாரது கொள்கைக்கு மாறுபாடான விளக்கத்தைத் தந்து, தடையுண்டாக்குவது போன்றமைத்துப் பாட, மற்றப் பகுதி அதற்குத் தகுதியான விடையைக் கண்டு, எதிர்த்தரப்பினரது கருத்தை ஏற்று அதனையே நியாப்படுத்துவதாகப் பாடுவது. இந்தப் பதிகத்துள்ள எல்லாப் பாடல்களுமே தடை போடும் வினாக்களாய் அமைய மற்றைப் பகுதியினர் அவற்றைத் தமக்குச் சாதமாக்கித் தக்க விடைகளாகக் கொடுத்து எடுத்துக் கொண்ட விடயத்தை நியாயப்படுத்தியுள்ளனர்.

இப்பதிகத்துள்ள திருப்பாடல்கள் எல்லாம் சாழலோ என்று நிறைவுறுங் காரணத்தால், செய்வீகத்தை உணர்த்த வல்ல திருவென்னும் அடையுடன் சேர்த்துத் திருச்சுழல் எனப் பதிகப் பெயர் அமைக்கப்பட்ட தெனலாம்.

இருபது திருப்பாடல்களைக் கொண்ட இப்பதிகம் நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா என்னும் பாவகையான் இயன்றது. இப்பதிகத்தின் உள்ளார்ந்த திரண்ட பொருள் சிவனுடைய காருண்யம் என்று திருவாசகத் திருவுள்ளக்கிடை குறிப்பிடும். சிவனுடைய கருணை என்பது அது.

பூசுவது திருநீறு; அணிவது சீறிப் பாய்கின்ற பாம்பு; பேசுவது, ஒன்றும் விளங்க முடியாத மறை மொழி. தெய்வம் என்னும் நிலைக்கு இது பொருந்துமா என்று ஒருத்தி கேட்க அதன் பொருத்தப்பாட்டினை எதிர்தரப்புப் பெண் குறிப்பிடுகின்றாள். பூசுவதனாலும் அணிவதனாலும் பேசுவதனாலும் என்ன குறைந்து விடப்போகின்றது! அவன் எல்லாவுயிர்களுக்கும் இறைவனாகத்தானே இருக்கிறான். அவன்தானே எல்லாமாகி இருக்கின்றான், என்பது முதலாவது திருப்பாடலின் பொருளாகின்றது.

தோழியே, என் தந்தை, எம் பெருமான், எல்லோர்க்கும் இறைவன் என்றிருப்பவருக்கு ஒரு நல்ல கோவணம் கிடைக்கவில்லையா? தைத்த கந்தலையா கட்ட வேண்டும்? என்று கேட்டாளாக, வேதங்கள் நான்கையும் அரைஞாணாகவும், அந்த உண்மை நூற் பொருள்களையே கோவணமாகவுங் கொண்டவன் அவன் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்பது விடையாகக் கிடைக்கின்றது. இங்கே இன்னொன்று உணர்தற்குரியது. வெளியழகு அவசியம் அற்றது என்பதும் உளவழகே வேண்டப்படுவது என்பதுமே அது.

தோழி, உங்கள் இறைவன் வதிவது சுடுகாட்டில்; உடுப்பது புலித்தோல்; தாயில்லை, தந்தையில்லை; தனிமையானவன்; பரிதாபத்திற்குரிய தலைவன் என்றாளாக, தந்தை தாயற்ற தனியனாய் இருந்தபோதும், தனிமையின் உயர்வு புலப்பட நிற்பவன். அவன் கோபித்தானெனின் உலகம் பொடியாகிவிடும் என்பதை, எல்லாவற்றையும் ஒடுக்கக் கூடிய ஆற்றலுடையவன் என்பதை அறிவாயாக என்றவாறு அறிவுறுத்தப்படுகின்றது.

தோழியே, யாகத்தை நடத்திய தக்கனை, அதனை நடைமுறைப்படுத்திய எச்சனைத் தலை அறுத்ததும், யாகத்திற்கு வருகை தந்திருந்த தேவர்களை முடித்ததும் என்ன காரணத்தலாம் என்றனளாக, தொலைத்த அதே நேரத்தில் அருள்

கொடுத்தான்; எச்சனெனுந் தக்கனுக்கு ஆட்டுத் தலை கொடுத்தருளினன். தண்டனை என்று ஒன்று கொடுக்கப்படுவது அருளலுக்காகவே என்பதைப் தெரிந்து கொள்வாயாக என்று அறிவுறுத்த ப்படுகின்றது.

தோழி, அடிமுடியை அறிந்துகொள்ள முடியாவகை சோதி வடிவினனாகிப் பாதலம் முகடு என்பவற்றைத் தொடும்படியாக நின்றானே! என்ன காரணம் என்றாளாக, அப்படி இறைவன் நின்றதனாலேதான் பிரமாவும் விஷ்ணுவும் கொண்ட சீற்றம் தணியந்தனர். அகங்காரம் நீங்கி, எல்லோரும் நன்மையடைதற்குரியராக வேண்டும் மென்ற உண்மையை உணர்த்தவே அப்படிச் சோதி வடிவினனானான் என்பது தெளிய வைக்கப்படுகின்றது.

தோழியே, பார்வதி ஒரு பக்கமாகி இடங் கொண்டிருக்க, மறுபுறம் இன்னொருத்தி நீர் வடிவினளாகிச் சடையிலே பாய்ந்திருக்கிறாளே! காரணம் என்ன என்று வினவினளாக, அவள் நீர் வடிவினளாகிச் சடையை இடமாகக் கொண்டிருக்காவிட்டால் உலகம் முழுமையும் பாதாளத்திலே அழுந்திப் பெருங்கேடாய் முடிந்திருக்குமே என்பது தெரிய வைக்கப்படுகின்றது என்றாள்.

தோழி, சப்திக்கின்ற கடலில் ஆரவரித்து வந்த நஞ்சை அன்று உண்டானென்பது ஒன்று. இதில் என்ன பெருமை என்பது தெரியவில்லையே என்றாளாக, அன்று ஆலகால விஷத்தை உண்ணாது விட்டிருந்தால் பிரமன் மால் உள்ளாய மேன்மைக்குரிய தேவரெல்லாம் மடிந்திருப்பார்களே! என்பதை உணர்த்தினாள்.

தோழி, தென்திசையில் விரும்பி ஆடுகின்ற தில்லைச்சிற்றம்பலவன் பெண்ணொருத்தியைப் பக்கத்தில் வைத்திருக்க விரும்பினானே! பெண்பித்துக்கொண்டவன் போலிருக்கே! பேதையே, பெண்பாற்பகுதியை அவன் விரும்பவில்லை யென்றால் இன்று இந்த இடமகன்ற உலகிலுள்ளோர் அனைவரும் வீடடையும் நெறியைச் சார்ந்து அதனை முற்றுவிக்க முடியாது அழிவர் என்பதறிக.

தோழி, நரம்பையும் எலும்பையும் அணிந்து, எலும்புக்கூட்டையும் தோள் மேலே தாங்க விரும்பினான். இதென்ன தவவேடமோ! எலும்புக் கூடு எப்படி வந்ததென்று தெரியுமா? பேரூழியிற் பிரம்மாவும் விஷ்ணுவும் மறைந்தமையை அறிவித்தற்காக அணிந்துள்ளானென அறிந்து கொள்க.

தோழியே, உடை புலித்தோல்; உண்பது மண்டையோட்டில்; உறைவிடம் சுடுகாடு; இப்படியானவனுக்கு இங்கு யார் அடிமைப்படுவர்? அப்படியெனினும் கேட்பாயாக. பிரமன், விஷ்ணு, இந்திரன் ஆய இவர்கள் வழி வழி அடியராயினரே!

தோழி, மலையரையன் பெண்திருவை உலகறிய மணந்து கொண்டான் என்பதென்ன? விளங்கவில்லையே! உலகம் அறியக் கூடியதாக அக்கினி சாட்சியாக அவன் மணம் செய்யவில்லை என்று கண்டால் உலகில் உள்ள உயிர்களெல்லாம் நூல்களிற் சொல்லப்பட்ட கருத்துகளில் கலக்கமடையுமே! அதனால் அவன் திருமணம் நடைபெற வேண்டியதாயிற்று.

தோழியே தேன் பாயுகின்ற வயல்கள் சூழ்ந்த தில்லையை உறைவிடமாகக் கொண்ட சிற்றம்பலவன் தான் திருவாலங்காடு சென்று நடனஞ் செய்வதற்கான காரணம் யாதாகலாம். அவன் அங்கு சென்று நடம் புரியாவிடின் இந்த உலகமெல்லாம் மாமிசம் பொருந்திய வேலையுடை காளிக்கு உணவாகிவிடும் என்பதறிக. உலகம் உய்ய நடம் வேண்டுமென்பது பொருள்.

தோழி, மதயானையில், அல்லது குதிரையில், அல்லது தேரில் ஏறாது எருதை விரும்பி எறியமைக்கு என்ன காரணம் சொல்லாம்? விசாலமான மதில்களான அக்கோட்டைகள் மூன்றையும் எரித்த காலத்தில் திருமால் இடபமாகி இறைவனைத் தாங்கினான். திருமாலின் விருப்பத்துடனேயே ஏறினான். இங்கே இறைமை புலப்படுகின்றது. காளை—அறத்திற்கறிகுறி.

தோழி, அன்று, சனகாதி நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளைக், கல்லாலின் கீழிருந்து அறமாக உபதேசித்தானே! அன்று கல்லாலின் கீழிருந்து நான்கு வேதங்களுட் சொல்லப்பட்ட பொருள்களை அறமாக உபதேசஞ் செய்தானாயினும், தன்னை முன்பு வழிபட்டுப் பின்பு மறந்தவர்களது முப்புரங்களையும் எரித்து அழித்தான் என்றவாறு.

தோழி, பொது இடத்திற் கூத்தாடுபவன்; உணவுத்தேவைக்காகப் பிச்சை ஏற்பவன். அப்படிப் பட்டவனைக் கடவுளென்று அடைவது எப்படி? அதுவா! வேதங்கள் நான்குமே அறிந்து கொள்ளாதனவாகி, எம்பெருமானே ஈசனே என்று புகழ்ந்தமையை அறிந்து கொள்க.

தோழி, சினங்கொண்ட சலந்தரனது உடலை அழித்த சக்கராயுதத்தை உடைய திருமாலுக்கு எப்படி அதனை அவனிடம் கொடுத்தான் இறைவன். திருமால் ஒருசந்தர்ப்பத்திற் தன் கண்ணை இடந்து இறைவன் திருவடிகளிலே மலராக இட்டு வணங்கினான். ஆகவே அவனுக்குச் சக்கராயுதத்தைக் கொடுத்தான் இறைவன் என்பதறிக.

தோழி, புள்ளி உடைய தோல் எம்பெருமானுக்கு உடையாகும். ஆலகாலவிஷத்தை அமுதமென உண்ட திறமையை யாமறியும் படியாகச் சொல்லுவாயாக. எங்கள் தலைவன் எதை உடுத்து எதை அமுது செய்யினும் தன் பெருமையைத் தான் நினையாதவன். பிறர் பொருட்டாய் எதையும் செய்வான் என்பது.

தோழி, அரிய தவத்தையுடைய சனகாதியர்க்குக் கல்லாலின் கீழிருந்து அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் உரைத்தருளிய காரணத்தை யானறியச் சொல்வாயாக. அரிய தவத்தை உடையவர்களாகிய அவர்களுக்கு அவற்றை அன்று அருளிச் செய்திரா விட்டால் திருந்திய உலகியற்கை அவர்க்குத் தெரியாது போகும் என்பதறிக.


கொழும்பு கொட்டாஞ்சேனை

*அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்*

*அறநெறிப் பாடசாலை*

**கல்வியூட்டும் பணி வழி நிற்போர்**

1. செல்வி. குஞ்சரா விஷ்ணுராசா. *(அதிபர்)*
2. திரு. விஸ்வலிங்கம் சண்முகசுந்தரம்
3. செல்வி. வடிவாம்பிகை வேலுச்சாமி
4. செல்வி. சசிகலா.சண்முகநாதன்
5. செல்வி. வானதி சச்சிதானந்தன்
6. செல்வி. நாகேஸ்வரி ரட்ணசபாபதி

கொழும்பு கொட்டாஞ்சேனை

# அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர்

## திருவூஞ்சல்

### காப்பு

சீர்பூத்த திருமாது மகிழுஞ் செல்வத்
திறம்பூத்த கொட்டாஞ்சே னையிலே மேவும்
பேர்பூத்த பிரணவத்தின் உருவே யான
பெருமைதரு வரதராஜ விநாய கர்க்குப்
பார்பூத்த பனிமலர்கைக் கொண்டு போற்றிப்
பண்பூத்த வூஞ்சலிசை பணிந்து பாடக்
கார்பூத்த கசடதட விகட மேவும்
கனிபெற்ற கரிமுகவன் கழல்கள் காப்பே.

### நூல்

1. நாதமொடு விந்துவெனுங் கால்கள் நாட்டி
நான்மறைகள் விட்டமதாய் நயந்து பூட்டிப்
போதமெனுஞ் சிவாகமநூற் கயிற்றை மாட்டிப்
பொலிவான ஒங்காரப் பீடம் கூட்டி
மாதவஞ்சே ரடியார்கள் வடந்தொட் டாட்ட
மணிமிளிரு நவரத்ன வூஞ்சல் மேவிப்
பாதமலர் பணிந்தேத்தும் அன்பர் வாழ
வரதராஜ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

2. பண்ணமரு மாடகையாழ் முனிவன் மீட்டப்
பாங்கினொடு தும்புருநற் பண்கள் பாட
விண்ணமரு நந்திமி ருதங்கம் கூட்ட
விளங்கிடு முனிவரர்கள் தாளம் போடக்
கண்ணிமையா வரம்பையர்கள் களிப்போ டாடக்
கருதுவினை யனைத்துமுடன் கலங்கி யோடக்
கண்ணியமாக் கொட்டாஞ்சே னையிலென்றென்றும்
கோயில்கொண்ட விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

3. அண்டமெலாம் தானாகி அனைத்து யிர்க்கும்
அருள்சொரியும் ஆதிசிவன் மைந்த னாகித்
தொண்டர்தொழு தேத்திநிற்கத் துலங்கித் தோன்றும்
தூயகரி முகத்தெந்தா யெனத்து தித்தே
கொண்டதுயர் நீக்குதற்குக் கொட்டாஞ் சேனை
குவல த்திற் சிறந்தபதி யெனத்துணிந்த
பண்டு புகழ் போற்றிடுவார்க் கருள்சுரக்கும்
வரதராஜ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

4. அகத்தியர்க்கன் றருள்புரிந்தா யென்பா ரோர்பால்
ஔவைக்கும் அருள்செய்தா யென்பா ரோர் பால்
அகக்கண்ணாற் கண்டுணர்ந்து அடங்கி நின்று
ஆராத காதலுடன் துதிப்பார் ஓர்பால்
செகத்தினிலே செயம்பெறச்செய் முதல்வா வென்று
சேர்ந்து நின்று தொழுவாரோர் பால தாக
மிகப்பெரிய கவுத்துவமும் மிளிர்ந்தே யாட
வரதராஜ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

5. கற்பகத்தின் மாமணியே கனியே தேனே
கதிரொளிபோல் அருள்வீசும் கணேசத் தேவே
பொற்புடனே மந்திரநீர் பனிநீர் சேர்த்துப்
பொலிவுடனே மானைந்தோ டிளநீர் கூட்டி
அற்புதமா யலைவீசும் கங்கை நீரும்
அபிடேகஞ் செய்துடனே அலங்க ரித்து
சொற்பதத்தாற் சோடசோ பசாரம் செய்யச்
சிறப்புடனே் விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

6. ஆதிசைவ அந்தணர்நால் வேதம் ஓத
அதிமதுரத் தமிழ்வேதம் அடியார் பாடக்
கோதில்வலம் புரியுடனே குரல்கள் ஆர்ப்பக்
கும்பிட்டு நிற்பார்தம் குறைகள் கூற
ஓதிடுநல் நாதஸ்வர ஓசை யோடு
ஓங்கியநற் றவிலொலியும் இணைந்து சேர
வீதியெல்லாம் வளஞ்சிறக்க வரம்கொ டுக்கும்
வரதராஜ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

7. ஆணவத்தாற் செருக்குற்ற ஆதி சேடன்
அருந்துயரம் மாற்றுதற்கே அருள்பு ரிந்தீர்
கோணலாச் சான்றுரைத்த கோல வண்ணன்
குறையிரந்து நிற்கவுடன் தீர்த்து வைத்தீர்
மாணலா முறுவலித்த நிலாவ ணங்க
மறைந்தபுகழ் மீண்டுபெற மனமி சைந்தீர்
பேணலுமைப் பெரிதெனநாம் போற்றி நின்றோம்
பேரருள்செய் விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

8. தேவர்களும் துந்துபிகள் இசைத்து நிற்பத்
தேவாரத் திருமுறைகள் ஒலி சிறப்பப்
பாவலரும் புரவலரும் பார்த்தி ருப்பப்
பண்ணிசையைப் பாவையரும் பாங்கா யோத
நாவலரும் நற்றமிழால் இசை பரப்ப
நாற்றிசையும் முனிவர்கள் துதிசெய் தேத்த
கோவளரக் குலம்வளரக் கொட்டாஞ் சேனை
வரதராஜ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

9. மலைமகளும் மகேஸ்வரனா ரோடு வந்து
மாமகனார் ஊஞ்சலினை இனிது நோக்கக்
கலைமகளும் அலைமகளும் களிப்பாய் நின்று
கவின்கையால் ஊஞ்சலினை அசைத்திருப்பத்
தலைசிறந்த அலங்காரப் பந்தல் நாப்பண்
தண்ணளிசே ரடியார்கள் களிப்போ டேத்த
அலையெனவந் தன்பரெலாம் அசையா நிற்ப
அருள்வரத விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

10. விக்னவி நாயகரே ஆடீர் ஊஞ்சல்
விரும்புவரம் தருபவரே ஆடீர் ஊஞ்சல்
பக்தர்கட்கு அருள்பவரே ஆடீர் ஊஞ்சல்
பரமதயா பரநிதியே ஆடீர் ஊஞ்சல்
முக்கண்ணர் முதற்புதல்வா ஆடீர் ஊஞ்சல்
மூஷிகவா கனனாரே ஆடீர் ஊஞ்சல்
பக்குவமா யுமைமைந்தா ஆடீர் ஊஞ்சல்
பலர்போற்ற விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

## வாழ்த்து

வேதாக மபுராணம் சிறந்து வாழி
விரும்புசிவா சாரியர்கள் பொலிந்து வாழி
ஏதமிலாச் சிவஞான தருமம் வாழி
ஏகதந்தன் அடியார்கள் என்றும் வாழி
மாதம்மும் மாரிமழை பொழிந்து வாழி
மாதவத்தோர் மனங்களிப்ப மலர்ந்து வாழி
கோதில்கொட் டாஞ்சேனை யுறைவோர் வாழி
கோலவிநா யகரருளும் வாழி வாழி.

## எச்சரிக்கை

உமையாள்தரு மகவேகண பதியே எச்சரீக்கை
எமையாள்பெரு நிதியேதிரு வருளே எச்சரீக்கை

மறையாய்மறைப் பொருளாய்ஒளிர் மணியே எச்சரீக்கை
மதிசூடிய சிவனார்மக வானாய் எச்சரீக்கை.

நாலுங்கரத் தானைமுகத் தரனே எச்சரீக்கை
நமன்வாதனை நலியும்விநா யகனே எச்சரீக்கை.

வரதராஜ நாயகமே ஐங்கரனே எச்சரீக்கை
வழுத்துமடி யார்க்கருளும் ஆனைமுக எச்சரீக்கை.

## பராக்கு

ஐந்துகரத் தானைமுகத் தையா பராக்கு
அரன்மைந்த அறுமுகவன் அண்ணா பராக்கு
மலையரையன் மகளார்பொன் மைந்தா பராக்கு
மாங்கனிக்காய் அத்தன்வலம் வந்தாய் பராக்கு

எந்தமையு மேற்றருள்செய் எழிலே பராக்கு
இயமபய மில்லெனச்செய் ஈசா பராக்கு

துதிக்கின்றோம் துணையாவாய் சுமுக பராக்கு
சுடர்வரத ராஜவிநா யகனே பராக்கு.

## மங்களம்

ஐந்துகரத் தையவரன் மகவாயினை மங்களம்
சிந்தைமகிழ்ந் தேதுதித்தோம் சிவைதனய மங்களம்

கயமுகனைக் காய்த்தமுக்கட் கணபதியே மங்களம்
பயமிலையெம் பங்கிலுறை பண்ணவர்க்கு மங்களம்

சீர்வாத நாயகமாம் சுமுகனுக்கு மங்களம்
பார்பரவ வாழுமுயர் பரன்மகவே மங்களம்

சித்திபுத்தி நாயகமே சிவன்மகவே மங்களம்
எத்திறத்தும் எமதிறையே எழிலுருவே மங்களம்.

*சுபம்*

---

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணன்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே

துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள்

கொழும்பு கொட்டாஞ்சேனை

# அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய

# நடராஜர் திருவூஞ்சல்

காப்பு

கார்பெருக நீர்பெருகு கொழும்பூர் நாப்பண்
கற்றோர்கள் நிறைகொட்டாஞ் சேனை வாழும்
நீர்பெருகும் அளியடியார் நிற்கும் ஆர்வம்
நிறைந்ததிருக் கோயில்தனில் இனிது மேவி
சீர்பெருகு நடராஜப் பெருமான் மீதேல்
சிவகாம சுந்தரிமீ தூஞ்சல் பாட
வேரடியார் ஓங்குசிறீ வரத ராஜ
விநாயகநின் வீறடிகள் காப்ப தாமே!

நூல்

1. இசைபெருகு நால்வேதங் கால்க ளாக
இன்பமிகு முபநிடதம் விட்ட மாக
நசையுறுமா கமங்களெலாம் கயிற தாக
நவங்கிளரும் பிரணவமே பீட மாக
வசையணுகா மந்திரங்கள் அணிய தாக
வடிவமைந்த ஊஞ்சல்மீ தினிது மேவி
மிசைவருகொட் டாஞ்சேனை அமர்ந்து வெற்றி
மிகுநடரா ஜவென் மணியே ஆடீ ரூஞ்சல்.

2. இன்மயமாய் இலகுதிருச் சடையுந் தோன்ற
இமைப்பினொடு முப்புரிநூல் மார்பிற் றூங்க
சின்மயமாந் திருக்கரங்கள் திகழ்ந்து மின்ன
தீவினைகள் கெடஅபய வரதங் காட்டி
பன்னுதிரு மறைப்பொருளைப் பலருங் கொள்ள
பருதியொளி பகலெனவே பதிந்து வீச
மன்னியகொட் டாஞ்சேனை மகிழ்ந்து கங்கை
மதிசூடும் நடராஜ ஆடீ ரூஞ்சல்.

3. இந்திரனு மைந்துதிரு நாம மோதி
இமையவரோ டருகுநின்று பணிந்து போற்றச்
சந்திரனும் வெண்டரளக் கவிகை தாங்கத்
தகுதிபெறு சாமரங்கள் தனதன் வீசச்
சுந்தரஞ்சேர் தும்புருநா ரதர்கள் பாட
துதியினொடு மலர்மாதர் வட்ந்தொட் டாட்டச்
செந்திருகொட் டாஞ்சேனை சிறந்து வாழும்
செய்யநட ராஜமணீ ஆடீ ரூஞ்சல்.

4. துய்யமறை முதற்பொருளாய் நின்ற நாத
சோதிபெறு பாதியுமை ஆதி நாத
வையமுன் படைத்தருளு மெங்கள் நாத
மலரயன்தன் தலைகொடுசெண் டாடு நாத
வெய்யவர்முப் புரமுன்னர் எரித்த நாத
வெற்றிபெறு சூலமுடன் தோன்று நாத
செய்யமர்கொட் டாஞ்சேனை சிறந்து வாழும்
தேவர்நட ராஜமணீ ஆடீ ரூஞ்சல்.

5. நுன்னுதிரு வுறைசடையும் மதியு மாட
சோதிநிறை கங்கையுடன் ஒடி ஆட
மன்னுதிருக் கரங்களுடன் பணிக ளாட
வளர்கொன்றை மலர்மாலை வாங்கி ஆட
உன்னுமொரு பங்கினிளம் உமையு மாட
ஒங்குமறைச் சிலம்பணியும் பதங்க ளாட
மின்னொளிர்கொட் டாஞ்சேனை மிளிர அன்பு
மேவுநட ராஜமணீ ஆடீ ரூஞ்சல்.

6. மேருமலை போலொளிருஞ் சடையு மாட
மேவுமதி கங்கையுடன் மருவி யாட
ஊருவின்மேல் படமெழுந்த நாக மாட
உரித்தகரி யுரியாடை உழன்றே ஆட
சீருருவ மானதிரு நயனம் மூன்றும்
சிந்தனைசெய் வார்க்கருளி அசைந்தே ஆட
காரொளிர்கொட் டாஞ்சேனை மிளிர்ந்து வாழும்
கவின்கொள்நட ராஜமணீ ஆடீ ரூஞ்சல்.

7. தரித்தபுலி யதழ்ஒருபால் தயங்கி ஆட
தவத்தினர்கள் மனமொருபால் முயங்கி ஆட
விரித்தசடை விறல்வினையை வீட்டி ஆட
விளங்குமொரு மந்திரத்தில் வினைகள் ஓட
சிரித்ததிரு முகமலர மலையின் மங்கை
சீர்கொண்டு நீலமலை போலச் சார
விரித்தமைகொட் டாஞ்சேனை விளங்க வாழும்
வீரநட ராஜமணீ ஆடீ ரூஞ்சல்.

8. அடைக்கலமே உனக்கெனுயிர் என்று சேர்ந்த
அந்தணனை அளித்திட்டுன் அபயந் தந்தே
புடைக்கவரு மந்தகனை உதைத்த கால்கள்
புதுமலராய் அடியார்கள் போற்றி ஏத்த
இடைக்குநிகர் மின்னெனெவே இவர்கள் அன்னை
இரக்கமுடன் இருவினைகள் போக்கி ஆட
நடைக்கணிகொட் டாஞ்சேனை நயந்து மேவும்
நாதநட ராஜமணீ ஆடீ ரூஞ்சல்.

9. ஆணுமிலி பெண்ணுமிலி அலியு மில்லா
அர்த்தநா ரீஸ்வரனாய் அமைந்த சோதீ
காணுமடி யார்க்கினிய சோதி யாகிக்
காணாத மூடருக்கே கலியு மானாய்
பேணுமுன தடியர்குறை போக்கி நாளும்
பெருகுநலம் ஈந்தருளு பெரும! ஞானக்
கோணலிகொட் டாஞ்சேனை கொழிக்க என்றும்
கோதைநட ராஜமணீ யாடீ ரூஞ்சல்.

10. அந்தணரும் ஆனினமும் அரசும் வாழி
அருமறையோ டாகமங்கள் அறங்கள் வாழி
முந்துமழை முகில்கற்பின் மாதர் வாழி
முதன்மையுறு சைவநெறி நீறும் வாழி
சந்தகம்கொட் டாஞ்சேனை சேர்ந்தோர் வாழி
சக்தியொரு மான்மழுவும் சிறந்து வாழி
செந்திருவாழ் கொட்டுநகர் சிறக்க மேவும்
சிவகாம சுந்தரியோ டாடீ ரூஞ்சல்.

### எச்சரிக்கை

திருவார்மலை மகளார்திகழ் பாகா எச்சரிக்கை
குருவாய்வரக் குமரற்கருள் குருவே எச்சரிக்கை

புலித்தோலுடை அரவம்அணி புனிதா எச்சரிக்கை
குலிசம் முனி யருளப்பணி கூர்ந்தாய் எச்சரிக்கை

மானோடொரு மழுவேந்திய மகிபா எச்சரிக்கை
கானார்பொடி நிறைவாயணி கபாலீ எச்சரிக்கை

வரதராஜவி நாயகனார் அத்தா எச்சரிக்கை
வரமீந்துயர் வாழ்வளிப்பாய் வரத எச்சரிக்கை.

பராக்கு

ஆலால மமுதாயேற் றாண்டாய் பராக்கு
மாலாய அயன்மாற்கு மறைந்தாய் பராக்கு
தேவாரத் திருமுறையாய்த் திகழ்வாய் பராக்கு
நாவார நாந்துதித்தோம் நலஞ்செய் பராக்கு

வேதத்தோ டாகமுமு மானாய் பராக்கு
பாதத்துப் பணிந்தனம்யாம் பரனே பரா்க்கு

புரமெரித்தோய் புரிசடையோய் புகலே பராக்கு
வரதராஜ விநாயகனார் அத்த பராக்கு.

மங்களம்

ஆதியந்த மில்லாத அப்பனுக்கு மங்களம்
போதிலுறை அயன்தலையொன் றகற்றினையே மங்களம்

மாதுமையைப் பாகத்துப் பரவவைத்தாய் மங்களம்
பாதிமதி மீதுசடைப் பரிந்தேற்றாய் மங்களம்

நால்வேதப் பொருளாகி நமதானாய் மங்களம்
பால் போலும் நீற்றினொளி பரவநிற்பாய் மங்களம்

திருமுறைகள் தருபொருளே திருமகவே மங்களம்
பெருமைதரு மொருதலைமைப் பேறானாய் மங்களம்.

---

# நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| தை | 1 | 15.01.99 | வெள்ளி | தைப்பொங்கல், பிரதோஷ விரதம் |
| | 3 | 17.01.99 | ஞாயிறு | அமாவாசை விரதம், பாசுபத விரதம் |
| | 5 | 19.01.99 | செவ்வாய் | தைச் செவ்வாய் வைரவ விரதம், |
| | 6 | 20.01.99 | புதன் | அப்பூதியடிகள் குருபூசை, |
| | 7 | 21.01.99 | வியாழன் | சதுர்த்தி விரதம், |
| | 9 | 23.01.99 | சனி | ஷஷ்டி விரதம், கலிக்கம்பர் குருபூசை |
| | 12 | 26.01.99 | செவ்வாய் | கார்த்திகை விரதம், |
| | 13 | 27.01.99 | புதன் | பீம ஏகாதசி |
| | 14 | 28.01.99 | வியாழன் | கண்ணப்பர் குருபூசை |
| | 15 | 29.01.99 | வெள்ளி | பிரதோஷ விரதம், அரிவாட்டாயர் குருபூஜை |
| | 17 | 31.01.99 | ஞாயிறு | பூரணை விரதம், தைப்பூசம் |
| | 21 | 04.02.99 | வியாழன் | சங்கட ஹர சதுர்த்தி விரதம், சண்டேசுரர் குருபூஜை |
| | 25 | 08.02.99 | திங்கள் | திருநீலகண்டர் குருபூஜை |
| | 26 | 09.02.99 | செவ்வாய் | தாயுமான சுவாமிகள் குருபூசை |
| | 29 | 12.02.99 | வெள்ளி | ஏகாதசி விரதம், விஷ்ணுபதி புண்ணிய காலம் இரவு 12.07 முதல் காலை 6.31 வரை |

உ

சிவமயம்

கொழும்பு கொட்டாஞ்சேனை

# அருள்மிகு வரதராஜ விநாயகர்

## இரட்டை மணிமாலை

-பண்டிதர் சி. அப்புத்துரை -

காப்பு

கட்டளைக்கலித்துறை

பொன்னார்ந் திலங்குகொட் டாஞ்சேனைப் பூம்பதிக் கோயில்கொளும்
மின்னார் வரதரா சைங்கரன் பூங்கழல் மீதிலயர்
மன்னு மிரட்டை மணிமாலை சூட்டி மனங்குளிர
முன்னித் துதிக்க முனைந்தனன் மூத்தவ முன்னிற்கவே

**நூல்**

**நேரிசைவெண்பா**

1. கோதில்கொட் டாஞ்சேனைக் கோவே குளிர்நிலவே
ஆதி வரதரா சைங்கரனே ~ பூதலத்தோர்
போற்று மிரட்டைமணிப் பொன்மாலை சூட்டுதற்காம்
ஆற்ற லளித்தே யருள்.

**கட்டளைக்கலித்துறை**

2. அருள்வாய் வரதரா சைங்கர நின்கழற் காட்படுத்தி
மருள்வா யழுந்தி மனத்தது மாசா மறந்துனையான்
இருள்வாய்க் கிடந்தே னிருவினைத் துன்பத் திடரகலக்
குருவாய் வருவாய் குறைதீர்த் தருள்வாய் குலக்களிறே.

**நேரிசைவெண்பா**

3. களிபெறுமா றவ்வைதனைக் காதலித்தேற் றந்நாள்
ஒளிதிகழ்கை லாயத்தி னுய்த்தாய் ~ அளியேனென்
வந்திக்கா நெஞ்சை வரதரா சைங்கரனே
சிந்திக்க வைப்பாய் தெளிந்து.

### கட்டளைக்கலித்துறை

4. தெளிந்தனஞ் செய்ய திருவடி தேராச் சிறுமையினை
பளிங்கெனக் கண்டோம் பரமன் திருத்தேர் பயிலுமச்சு
முளிந்திட முப்புரம் முற்றிலம் தீவெந்து மூழ்கையிலே
அளிந்திடு மன்பினோ டாள்வாய் வரதரா சைங்கரனே.

### நேரிசைவெண்பா

5. ஐங்கரனே ஆனைமுகத் தைய அரன்மகனே
பிங்கலையாள் பேறே பிரணவமே - பொங்கிநலி
வல்வினைகள் வாட வரதரா சைங்கரநல்
கெல்லையில்பே ரின்ப புரி.

### கட்டளைக்கலித்துறை

6. புரிந்துணர் வில்லாப் புலையனேன் தன்னைப் புறத்திலிடா
திரிந்த திருவினை யின்புகா ணென்றே எழிற்கையினாற்
பரிந்தெடுத் துன்கழல் பற்றிப் படர்ந்திடப் பண்ணிடுவாய்
கரிந்த கயமுகற் காய்ந்த விநாயக காத்தருளே.

### நேரிசைவெண்பா

7. காத்தனைநீ ஞாலம் கடமுனிதன் குண்டிகைநீர்
நீத்தமிகு காவிரியாய் நீண்டிடவே - மூத்தவனே
வாழ்வளிக்க வேண்டும் வரதரா சைங்கரவென்
சூழ்வினைக ளெல்லாந் துரந்து.

### கட்டளைக்கலித்துறை

8. துரந்தேன் வரதரா சைங்கர நின்பதத் தூநிழலை
இரந்தேன் இருவினை ஏகிட ஈடில்பே ரின்புணர்வு
பரந்து பரவிப் பணிந்துநின் றேனைப் பரிதவித்திங்
கிரங்கு நிலைதவிர்த் தன்பரை முந்துற வேற்றருளே.

### நேரிசைவெண்பா

9. முந்து மடியருக்கு முற்படுத்தல் செய்குவையே
எந்தை யிணையடியே என்னடைவு - சிந்தைநிறை
மன்ன வரதரா சைங்கரநின் மைந்தனென
தின்னல்தீர்த் தேற்பாய் இனி.

## கட்டளைக்கலித்துறை

10. இனிக்கண மேனு மியையா துனைப்பிரிந் திங்கிருக்கை
மனித்தப் பிறவி வரதரா சைங்கர மாண்புடைத்தென்
றினித்த முடைய இறையடி கண்டிட ஏங்கிற்றுளம்
பனித்தவுன் சீரடி பற்றித் தொடரப் பணித்தருளே.

## நேரிசைவெண்பா

11. பணிந்தே பருப்பமுது பால்தெளிதேன் பாகு
துணிந்த கரும்புகனி தூபம் - திணிந்தவிருள்
சிந்துமொளித் தீபம் சிறக்கவமைத் தேன்திருமுன்
வந்தேய ருள்புரிகு வாய்.

## கட்டளைக்கலித்துறை

12. வாய்ந்த மனத்திய லாலுனை வாழ்த்தி வணங்குகின்றேன்
காய்ந்து கரிந்த கருங்கலா மென்றிடக் காழ்த்தமனம்
தேய்ந்து திருவொளிர் சிந்தைய னாயிடச் செய்தருள்வாய்
ஏய்ந்த சிறையினிற் சேந்தனை மீட்டனை எம்மிறையே.

## நேரிசைவெண்பா

13. எம்மிறைசேர் கோயில் எழிலார் திருத்தொண்டாற்
றம்வினைதீர்ந் தின்பார்தல் தாங்கண்டோம் - எம்மைநிதம்
வாட்டுவினை போக்கும் வரதரா சைங்கரவுன்
நாட்டமென்பா லாம்நம்பி னேன்.

## கட்டளைக்கலித்துறை

14. நம்பியுன் தாளிணை நாடி நயந்தேன் நமனுலகக்
கும்பி தவிர்த்துன் குரைகழற் கேயெனைக் கூவிடுவாய்
தம்பி மயிலெழத் தந்தையைத் தான்வலம் வந்துகனி
வம்பெனப் பெற்ற வரதரா சைங்கர வாழ்த்துவனே.

## நேரிசைவெண்பா

15. வாழ்த்த வணங்க வறியா வறியனையப்
பாழ்த்த நரகப் படுகுழிக்கண் - ஆழ்த்திவிடா
வண்ண மணைப்பான் வரதரா சைங்கரனென்
னெண்ணத் தினிக்கு மிறை.

## கட்டளைக்கலித்துறை

16. இறையவ வென்தன தின்ன லிரிந்திட வேயருள்வாய்
மறைமுதன் மைந்த வரதரா சைங்கர வாழ்முதலே
முறையிது வோவெனை மூண்டெழு துன்பியல் மூடைகளு
ளுறையவிட் டுண்டி யானென்கை ஓங்காரத் துட்பொருளே.

## நேரிசைவெண்பா

17. பொருளெனவே போற்றினர் பொய்ம்மயக்குப் போக
விருள்நீங்கி இன்பநிலை எய்த ~ அருளினைகாண்
ஐய வரதரா சைங்கரநிற் காட்பட்டேன்
உய்திபெற ஒன்றியணை ஓர்ந்து.

## கட்டளைக்கலித்துறை

18. அணைத்தனை நம்பியை ஆரமு தேற்றே யறிந்துவந்தோம்
பிணைத்த பிறவிப் பெருமை யுணர்வினிற் பின்தொடர்ந்தேன்
இணைந்த இருவினை யேகிட வென்னையு மின்னடிக்கீழ்
பணைக்கை வரதரா சைங்கர வேற்குவை பற்றினனே.

## நேரிசைவெண்பா


19. பற்றுமிகும் ராவணன் பத்திசெய்த லிங்கமதோ
அற்புதமாய்க் கோகர்ணத் தானதே ~ மற்புயத்த
மாவரக்கற் றேய்த்தாய் வரதரா சைங்கரவென்
பாவவினை போகவெனைப் பார்.

## கட்டளைக்கலித்துறை

20. பாரதம் மேருவிற் பண்டு பொறித்தமை பாரறியும்
பேரதோ ராயிரம் பெற்றபெம் மான்சடைப் பிள்ளைமதி
நேரது கோட்டு நிறைவெனக் கொண்டென நேர்ந்தெனையும்
கோருவ னேற்க வரதரா சைங்கர கோதிலையே.

# பஞ்சமுக விநாயகர்





**Reg. No: QD/66/ News 98**. இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால்
48B, புளூமெண்டோல் வீதி, கொழும்பு - 13. என்னும் முகவரியி ள்ள
யுனி ஆர்ட்ஸ் இல் அச்சிட்டு 1998-12-24 இல் வெளியிடப்பட்